விலை 20/=

பக்கங்கள் 24

09 பெப்ரவரி 2019

புதுமை : 03 விதி : 140


# புதுவிதி

PUTHU VITHI

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இரத்தவெறி

தயாராகும் சாட்சிகள்



மனோவிடம் கற்கவேண்டிய தமிழ்த் தலைமைகள்



ஈ.பி.டி.பி. மீது சட்ட நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை?



உஷார்...! ஏ.ரி.எம். மோசடிகள் தப்பும் வழிமுறைகள்



தேடும் கண்கள்

# தேடும் கண்கள்



## கீச்சான்

ஆங்கிலப் பெயர் : Shrikes
உயிரியல் பெயர் : Lanius

கீச்சான் அல்லது பருந்துக் குருவி என இந்தக் குருவி அழைக்கப்படும். சாம்பல் கீச்சான், செம்முதுகுக் கீச்சான், பழுப்புக் கீச்சான், மட்டக் கீச்சான் என சுமார் 35 வகைகள் உள்ளன.

ஊனுண்ணிப் பறவையான இது வேட்டையிலும் வல்லது. எலி, சுண்டெலி, வெட்டுக்கிளி, ஓணான், பல்லி, பெரிய பூச்சிகளை வேட்டையாடி முள் மரங்களில் குத்தி கொன்றபின் உண்ணும். உணவு கிடைக்கும்போது அந்த உணவை முள்ளில் குத்தி சேமித்து வைத்துப் பிற பறவைகள் கவர்ந்து போகாவண்ணம் பாதுகாக்கும்.

20 செ.மீ. தொடக்கம் 50 செ.மீ. வரை இந்தப் பறவைகள் வளரக் கூடியவை. பொதுவாக இந்தப் பறவைகளுக்கு அலகில் இருந்து கண் ஊடாக கறுப்பு கோடு ஒன்று செல்லும். இதை வைத்தே இந்தப் பறவைகளின் அடையாளம்.

ஒரு கீச்சான் குருவி 3 தொடக்கம் 6 முட்டைகளை இடும். முட்டைகள் 13 -16 நாட்களில் பொரித்து குஞ்சுகள் வெளியே வரும்.

இலங்கையிலும் தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்தப் பறவைகள் காணப்படுகின்றன.



**பச்சைக் குக்குறுவான்**
இடம் : நல்லூர் வடக்கு — படம் : ரா. ராகவ்



**வயலின் பூச்சி (கும்பிடு பூச்சி வகை)**
இடம் : கோப்பாய் — படம் : வெ.துளஸ்யா



**சிறுநீல மீன்கொத்தி**
வைல்ட் ஸ்ரீலங்கா — படம் : சிவா

புகைப்படங்களை எமக்கு அனுப்ப
வேண்டிய முகவரி : puthuvithi@gmail.com



**காட்டுச் சேவல்**
வைல்ட் ஸ்ரீலங்கா — படம் : திலான் வீரசிங்க



**கருஞ்சிட்டு** (Black Robin)
இடம் : கோப்பாய் — படம் : செ.ராஜேந்திரா

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 09 பெப்ரவரி 2019 | விதி : 140

# வாள்வெட்டு வீரர்களைத் தேடி வெளிநாடுகளில் வேட்டை



யாழ். குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்களைக் கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டுவந்து விட்டதாகவும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட 'ஆவா குழுவினர்' கைது செய்யப்பட்டு விட்டனர் எனவும் சிலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று விட்டனர் எனவும் அவர்களைக் கைது செய்து நாட்டுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்குத் தப்பிப் போய்விட்ட மத்திய வங்கி பிணைமுறி மோசடி தூதுவர் ஜாலிய விக்கிரமதுங்க, முன்னாள் ரஸ்ய தூதுவர் உதயங்க வீரதுங்க போன்றோர் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுப் பல மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் கைது செய்யப்படாதது போன்று வாள்வெட்டு வீரர்களின் கைதும் இருக்குமோ என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

எனினும் அவர்கள் உயர் மட்டத்தினர் என்பதாலும் அரசியல் செல்வாக்கு உடையவர்கள் என்பதாலும் கைது செய்யப்படமாட்டார்கள் என்றும் அவர்கள் ஆயுதம் ஏந்தாதபடியால் பயங்கரவாதிகள் அல்ல என்பதாலும் கோடிக்கணக்கான பணமோசடி சிறு குற்றமே எனவும் ஆதலால் அவர்கள் கைது செய்யப்பட மாட்டார்கள் எனவும் பாரிய குற்றமான வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் வெளிநாடுகளின் உதவியுடன் விரைவில் கைது செய்யப்பட்டு விடுவார்கள் எனவும் சில வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

அப்படியானால் வாள்வெட்டுக் குழுவின் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இருக்கின்றனர் எனச் சந்தேகம் நிலவும் நிலையில் அவர்களும் கைது செய்யப்படுவார்களா எனச் சிலர் கேள்வி எழுப்பியபோது இலங்கை இராணுவத்தினர் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர்கள் எனவும் அவர்கள் எந்தக் குற்றத்தில் ஈடுபடும்போதும் ஒழுக்கத்தை மீறமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

**ஊசி போற இடம் பார்ப்பார்**
**உலக்கை போகுமிடம் பாரார்**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைய மரபணுப் பரிசோதனை அவசியம்

## ஞானமுத்து சிவநேசன் ஆலோசனை

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் உள்ள நிலையில் மகிழூர் கிராமத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிவநேசன் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இணைவோரை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

மேலும், அவர்களிடம் பறக்கும் குணம், பாயும் குணம், சலுகைகளுக்கு விலைபோகும் குணம் என்பன உள்ளனவா என அவர்களின் இரத்தத்தை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கண்டுபிடிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால் தற்சமயம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்களாக வந்து பின்பு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டோர் ஆகியோரும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமா என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

கஜேந்திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன், முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் மரபணுப் பரிசோதனை செய்யாததால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறினார்கள் என இதுவரை அவர் சொல்லவுமில்லை.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட ஒரு முதியவர், புலிகள் காலத்தில் பிரபாகரனே ஏக தலைவர் எனக் கோசமிட்டவர் சம்பந்தர். புலிகள் இல்லாத காலத்தில் பிரபாகரன் தன்னைக் கொல்ல முயன்றார் என்று கூறிய சம்பந்தர் ஐயாவின் இரத்தத்தை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கூறினார்.

எதற்கும் சிவநேசனின் இரத்தத்தைச் சோதிப்பதை முதலில் செய்ய வேண்டும் எனச் சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

**காமாலைக் கண்ணனுக்கு**
**கண்டதெல்லாம் மஞ்சள்**

# அரசில் சிறுபான்மையினர் ஆதிக்கம் ஜனாதிபதி கவலை தெரிவிப்பு



இன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் சிறுபான்மை இனக் கட்சிகளின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதாகவும் தற்சமயம் உள்ள நிலையில் யார் ஆட்சியமைத்தாலும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு தேவை எனவும் அதனால் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை நிலவுவதாகவும் உடனடியாக ஒரு பொதுத் தேர்தலை நடத்தி ஸ்திரமான ஒரு அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறைகூவல் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே ரணிலை ஆட்டிப் படைப்பதாக மஹிந்த தரப்பினர் குற்றஞ்சாட்டும் நிலையில் ஜனாதிபதியும் அதே தொனியில் உரையாற்றியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினர் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்கியமையாலேயே அவர் ஜனாதிபதியானார் என்பதும் அவர் தோல்வியடைந்தால் அவரின் உயிருக்கே உத்தரவாதம் இருந்திருக்காது என அவர் கூறியதும் மறந்து விட முடியாது.

அன்று அவரை மண்ணுக்குள் அனுப்பவிருந்தவர் நண்பராகி விட்ட நிலையில் அவரை அதிகாரத்தில் ஏற்றி வைத்த சிறுபான்மையினர் எதிரிகளாகி விட்டனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த அணியினர் வேறு ஒருவரை வேட்பாளராக நிறுத்தினால் சிறுபான்மையினர் பற்றியும், ஸ்திரமான அரசாங்கம் பற்றியும் என்ன சொல்லப் போகிறார் என இதுவரை தெரியவரவில்லை.

**ஏறி வந்த ஏணி தேவையில்லையென்று**
**எட்டி உதைத்தானாம்**
**இறங்கலாமென்று காலை வைத்தபோது**
**கவிழ்ந்து விழுந்தானாம்**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்



























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## நம்பிக்கையை விதையுங்கள்

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டியவர்கள் பொலிஸார் "அவர்கள் தங்கள் கடமைகளை செய்கிறார்களா?" எனக் கண்காணித்து பொலிஸ் சேவை திறம்பட இயங்குவதை உறுதி செய்ய வேண்டியவர்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினர். ஆனால், இந்த இரு துறையினரும் நேர்மையாக செயற்படாமையால் நாடு முழுவதும் குற்றச் செயல்கள் தாராளமாக இடம்பெற்று வருகின்றன. குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்குகின்றனரா என்றுகூட சந்தேகம் எழுகிறது.

போதைப் பொருள் தடுப்பு வாரத்தை முல்லைத்தீவில் ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி. இந்த வாரத்தில் கஞ்சா கடத்தல் குறித்துத் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்த மாணவனை பாடசாலை வளாகத்துக்குள்ளேயே புகுந்து தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள் கடத்தல்காரர்கள். இந்தச் சம்பவம் இடம்பெற்று 2 வாரங்கள் முடிவடைந்துவிட்ட போதிலும் பொலிஸாரின் நடவடிக்கை எதுவுமில்லை.

வாள்வெட்டுக் குழு, ரௌடிகள் குழுவின் அட்டகாசம் சீசனுக்கு சீசன் அதிகரிப்பதும் குறைவதுமாக உள்ளது. தினமும் வடக்கில் போதைப்பொருள்கள் கடத்தப்படுகின்றன. இந்தக் கடத்தல்களின் பின்னணியில் பெரும் தலைகளும் பொலிஸாரின் தயவும் இருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யச் செல்லும் மக்களுடன் பொலிஸார் நடந்து கொள்ளும் முறைகள் குற்றவாளிகளுடன்கூட அப்படி நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம் என மக்கள் சாடுகின்றனர். இவ்வாறான நிலையில்தான் மக்களின் ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என்று பொலிஸார் சாடுகின்றனர்.

வடக்கு பொலிஸ் நிலையங்களில் இன்னமும் தமிழுக்கு இடம் வழங்கப்படாத நிலையே தொடர்கிறது. லஞ்சம், நடத்தை மீறல்கள், குற்றவாளிகளை காப்பாற்றுவதன் மூலம் குற்றங்களுக்கும் துணை போதல் எனப் பொலிஸாரின் குற்றச் செயல்களும் அதிகரித்தே உள்ளன. திருட்டு, கொள்ளைகள் தொடராக நடக்கின்ற போதிலும் அச்சம் காரணமாக பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு கொடுக்க அஞ்சுகின்றனர். குற்றங்களில் ஈடுபடும், குற்றங்களுக்கு துணைபோகும் பொலிஸாருக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் வாளாதிருக்கிறது.

போருக்கு முன்னரான காலத்தில் பொலிஸாரின் நடவடிக்கைகளால் காக்கிகளை வெறுத்தார்கள் மக்கள். இப்போதும் அவ்வாறான வெறுப்புணர்வே மக்களிடத்தே மேலோங்கியுள்ளது. பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நல்லுறவு இருந்தால் மட்டுமே நாட்டில் குற்றங்கள் குறையும். எனவே இந்த நல்லுறவைக் கட்டியெழுப்ப பொலிஸ், தேசிய பொலிஸ் ஆணைக்குழுக்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை விதைக்க வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 38

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

சில நூறு மீற்றர்கள் கடந்த போது அஞ்சலி செலுத்தாது செல்வது அவர்களுக்கு மனதுக்கு உறுத்தலாக இருந்தது. எனவே சைக்கிளைத் திருப்பி மாவீரர் மண்டபத்தை நோக்கிச் செலுத்தினார்.

ஒவ்வொரு மாவீரர் வித்துடலாக அஞ்சலித்து வந்தவருக்கு வானமே இடிந்து விழுந்தது போல அந்தப் பெயர் அந்த வித்துடல் பெட்டியில் பொறிக்கப்பட்டிருந்தது. அது அவரது மகள். மனைவி சுயநினைவற்று மயங்கி விழுந்தார். வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தாய், தந்தையர் எங்கிருக்கிறார்கள் எனத் தெரியாததால் சொந்த முகவரியோடு யாருமற்று உரிமை கோரப்படாத வித்துடலாக அவரது பிள்ளையின் உடல் அஞ்சலியின் பின் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட இருந்தது. நேரம் போய்விட்டதென கடந்து சென்றவர்களை மீண்டும் திரும்ப வர வைத்தது எது? ஒவ்வொருத்தரது பேழையிலும் பெயர்களைத்தேட வைத்தது எது? என்பதெல்லாம் புரியாத புதிர்களே.

பின்னர் தாமே பிள்ளையின் பெற்றோர் என்பதை உறுதிப்படுத்தியதால் இயக்கம் பாண்டியன்குளத்திற்கு வித்துடலை எடுத்துச் சென்று உற்றார், உறவினரின் இறுதி அஞ்சலி அழுகையோடு மீண்டும் கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்லத்திலேயே வித்துடலை விதைத்தனர். அவர், அவளை இறுதியாக கண்டபோது 'அப்பா இனி நீங்க என்னைப் பார்ப்பதாக இருந்தால் எனது உயிரற்ற உடலைத்தான் பார்ப்பீங்கள்" என சொல்லியிருந்தாள். அதுவே பலித்தது. வாழ்நாளின் தீராத துயருமானது.

மகளின் வித்துடலை விதைத்து வீடு திரும்பிய போது எல்லோரும் இருப்பதாகவே அவர் நினைத்துக் கொண்டார். அடுத்தநாள் காலையில் தான் பிள்ளைகளை அவரது கண்கள் தேடியது. எல்லோரும் குறுக்கும் நெடுக்குமாக திரிந்தனர். இளையமகளின் நடமாட்டத்தைக் காணவில்லை. எல்லோரும் இளைய மகளைத் தேடினர். அப்போதுதான் அவள் துயிலுமில்லத்தில் இருந்தே இயக்கத்துக்குப்போன விடயம் எல்லோருக்குமே தெரியவந்தது.

தெரிந்த போராளிகள் மூலம் அவளைத் தேடினர். அவள் தனது விபரங்கள் யாவற்றையுமே வேறாகப் பதிந்திருந்தாள். அதனால் அவளை யாராலுமே தேடிப்பிடிக்க முடியவில்லை. ஆனால் முகமாலைச் சண்டையில் ஒரு காலையும் ஒரு கண்ணையும் பறிகொடுத்து மருத்துவமனையில் இருந்தபோதுதான் அவள் தனது பொறுப்பாளரிடம் தான் தவறாக விபரங்களைப் பதிந்ததாகவும் தனது உண்மை விபரத்தின்படி அக்கா ஒருத்தி மாவீரர் என்பதையும் தாய், தந்தை பாண்டியன்குளத்தில் இருப்பதையும் தெரிவித்தாள்.

அவளது காயங்கள் மாறியதும் அவள் கதறக்கதற வலுக்கட்டாயமாக வீட்டுக்கு அனுப்பப்பட்டாள். காரணம் அப்போது அவளது தந்தையும் துணைப்படையில் இருந்ததால். தன் பிள்ளைகள் போராட்டத்தில் பங்கெடுக்கத் தான் அவர்கள் மூலமாக குளிர்காயக்கூடாதென அவர் நினைத்திருக்கலாம். கதையைக் கேட்டுக்கொண்டிருந்த சிராட்டிக்குள அக்கா அழுதாள்.

'அக்கா சத்தியமா எனது கணவரின் அத்தான் மீது தனிப்பட்ட கோபம் எதுவும் இல்லை. ஆனால் சில சுயநலப் பழக்கவழக்கங்கள்தான் பிடிக்குதில்லை." எனக் கூறினேன். சிலவேளை காயமடைந்ததனாலும் முதுமையும் உணவின்மையால் ஏற்பட்ட அசதி, குடும்பத்தைப் பிரிந்த மனப்பிறழ்வுகளும் சேர்ந்ததால் செய்வது என்ன என தெரியாமலும் சிலவற்றை செய்யலாம். ஆனால் அவற்றை எல்லாம் தாங்கவும் கேட்கவும் பொறுமை கொள்ளவும் நாங்களும் சொர்க்கத்திலிருந்து வரவில்லைத்தானே. எல்லோருமே இங்கு ஒரு வகையில் மனநோயாளிகளே எனக் கூறினேன். அழுதவள் சிரித்தாள்.

எனக்கும் கடைசிநேரம் இயக்கம் செய்ததை நினைக்க நினைக்க கோபம் வருகிறது. ஆனால் அவர்களுக்கு கட்டளையிட்டதையே அவர்கள் செய்தார்கள். சிலர் தம்மைத் தப்புவிக்க அப்பிடிச் செய்தார்கள். இப்படித்தான் மாத்தளன் பகுதியில் இருந்த போது, முழங்காலளவு நீரேரிக்கால் ஆமிக் கட்டுப்பாட்டுப் பகுதிக்க போக சனம் புறப்பட்டது. அந்த இடத்திற்கு நாம் அன்றுதான் வந்திருந்தோம். ஆமிக் கட்டுப்பாட்டுக்கை போகும் எண்ணம் எதுவும் எமக்கு இருக்கவில்லை. ஒரு மத்தியான நேரம்.

திடீரென திரள்திரளாக சனங்கள் ஆமிக் கட்டுப்பாட்டுக்கை அந்தத் தண்ணிக்கால இறங்கி ஓடத் தொடங்கீற்றுகள். இயக்கம் கண்ணுக்கை எண்ணை விட்டு எதிரியோடு போராடிக் கொண்டு மக்களையும் போகவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தாலும் எதிர்பாராத திருப்புமுனைகளை ஏற்படுத்தி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் போய்க்கொண்டிருந்தனர். இயக்கத்தின் எதிர்பார்ப்பில் ஒருவேளை சனங்கள் அதிகாலையிலோ அல்லது இரவுப் பொழுதுகளிலோதான் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் போவது வழமையாக இருந்தது. ஆனால் அன்று மதியப்பொழுதில் சனங்கள் புறப்பட்டது இயக்கம் எதிர் பார்க்காத ஒன்றே.

இதனால் வெளியேறிய மக்களைப் போகவிடாது தடுக்க புலிகள் மேல் வெடி வைத்தனர். ஒரு ஆங்கில எழுத்தின் ஏ வடிவில் அல்லது ஒரு கெற்றப்போல் வடிவில் ஆமியும் மேல் வெடி வைத்தவாறு அந்த நீர்நிலைக்குள் இறங்கி தம்மை நோக்கி ஓடி வந்த மக்களைப் பாதுகாப்போடு அழைத்துச் சென்றனர். இது அங்கிருந்த அனைவருக்கும் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியது. அடுத்து ஒரு குழு திரண்டு அந்த நீரேரியால் ஓடத்தொடங்கியது. இப்போது புலிகளுக்கும் கடும் கோபம் வந்திருக்க வேண்டும். அவர்கள் மக்கள் ஓடிய திசையல் சுடத்தொடங்கினர். ஆனால் அவர்கள் திரும்பி வரவேயில்லை. ஆமிக் கட்டுப்பாட்டுக்குள்ளேயே ஓடினர்.

(சாட்சியம் நீளும்)

# மனோவிடம் கற்கவேண்டிய தமிழ்த் தலைமைகள்

■ யோகநாராயணன்



தோட்டத் தொழிலாளர்கள் கூட்டுத் தொழிற்சங்கக் கமிட்டிக்கும் தோட்ட முதலாளிமாருக்குமிடையே விக்கி விக்கித் தொடர்ந்த பேச்சுக்கள் 2016 இல் ஏற்பட்ட இணக்கப்பாட்டை விட மொத்தச் சம்பளம் 20 ரூபா மட்டும் அதிகரிக்கப்படும் வகையில் ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டு முடிவுக்கு வந்துள்ளது. ஆர்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், நடைபயணம் எனப் பல்வித போராட்டங்கள் இடம்பெற்றன. அதுமட்டுமின்றி தோட்டத் தொழிலாளர்களின் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா கோரிக்கைக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கு, கொழும்பு எனப் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் இடம்பெற்றன. எனினும் மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக 20 ரூபா சம்பள அதிகரிப்புக்கு மட்டும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த காலங்களைப் போன்று இம்முறை தோட்டத் தொழிலாளர் ஏமாந்து விடவில்லை. எட்டப்பட்ட உடன்பாட்டை எதிர்த்து மலையகமெங்கும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

இப்படியான நிலையில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி மேற்படி ஒப்பந்தத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியுள்ளது. முற்போக்குக் கூட்டணியின் சககட்சிகளின் தலைவர்களான திகாம்பரம், இராதகிருஸ்ணன் ஆகியோரும் அதே தீவிரத்துடன் களத்தில் இறங்கியுள்ளனர்.

அதில் மனோ கணேசன் தெரிவித்த கருத்துக்கள் கடுமையானவையாகவும் எவ்வித விட்டுக் கொடுப்புக்கும் இடமளிக்காதவையாகவும் அமைந்துள்ளது.

அதாவது இன்றைய பிரதமரோ, ஐக்கிய தேசிய முன்னணி அரசோ ஆட்சியமைப்பது தமிழ் முற்போக்குக் கூட்டணி வழங்கிய ஆதரவினால்தான் எனவும் தங்களைக் கலந்து கொள்ளாமல் செய்யப்பட்ட ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்து விட்டு வீதியில் இறங்கிப் போராடப் போவதாகவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் என்றாலும்கூட அவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் அரசாங்கம் கவிழும். அது அவர்களின் பலம். இந்தப் பலத்தைச் சரியான முறையில் சரியான நேரத்தில் பிரயோகித்து மலையக மக்களின் கோரிக்கைக்கு வலுச் சேர்த்துள்ளனர்.

அவர்களின் அந்த உறுதிப்பாடு காரணமாகக் கூட்டு ஒப்பந்தம் வர்த்தமானியில் பிரசுரமாவது தடை செய்யப்பட்டதுடன் எதிர்வரும் 5 ஆம் திகதி மீண்டும் பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது அவர்களின் உறுதிக்குக் கிடைத்த வெற்றியென்றே சொல்ல முடியும்.

அப்படி மனோ கணேசனால் துணிச்சலுடனும் மக்களுக்கான நேர்மையுடனும் ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்த முடியுமென்றால் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தலைமைகளால் அப்படியொரு அழுத்தத்தைக் கொடுக்க முடியவில்லை.

கடந்த 3 வருடங்களுக்கு மேலாக எதிர்க்கட்சியாக இருந்த போதிலும் தமிழ்த் தலைமைகள் அரசாங்கத்துடன் நெருக்கமாக ஒத்துழைத்தே வந்துள்ளன. இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு புதிய அரசியலமைப்பு மூலம் எட்டமுடியும் எனக் கூறப்பட்டு அதை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மூன்று வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு, வழிநடத்தற் குழு, நிபுணர் குழு என இந்த அறிக்கை பல குழுக்களில் மூழ்கி எழுந்த போதும் அது இன்னமும் ஆலோசனைகள் என்ற மட்டத்திலேயே உள்ளது.

1972 ஆம் ஆண்டில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு 1978 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு என்பன ஆறு மாத காலங்களிலேயே தயாரிக்கப்பட்டு, நிறைவேற்றவும்பட்டன. தற்போதைய அரசியலமைப்பு மட்டும் ஏன் இப்படி மூன்று வருடங்கள் கடந்தும் இழுபடுகின்றது. இதைத் துரிதப்படுத்தும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

இரு வரவு-செலவுத் திட்டங்கள் அண்மையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் என்பனவற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவையே வழங்கியது. அந்தச் சந்தர்ப்பங்களில் கிடைத்த வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் பயன்படுத்தவில்லை. அதாவது அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இருந்த காலப்பகுதியில் அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடிய தமிழ்த் தலைமைகளால் ஏன புதிய அரசியலமைப்பை நிறைவேற்றும் கைங்கரியத்தை மேற்கொள்ள முடியவில்லை.

இதற்கான பதிலைப் பின்வரும் உரைகளில் தேடிப் பிடித்துக் கொள்ள முடியும்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா 22.04.2017 அன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முன் உரையாற்றும்போது கூட்டு அரசு தமிழர்களைக் கைவிட்டாலும் நாம் சர்வதேச சமூகத்தினூடாக எமக்கான தீர்வை அடைவதற்காகவே அவர்களோடு இணைந்து பயணிக்கிறோம். தற்போதைய அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கினோமானால் தமிழர்களுக்கு அதிக தீமையை இழைத்தவர்கள் ஆட்சிக்கு வந்துவிடுவார்கள்' எனக் கூறியிருந்தார்.

அதவாது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் அதைப் பயன்படுத்தி மஹிந்த ஆட்சிக்க வந்துவிடுவார்" என்பதே அதன் அர்த்தமாகும்.

1968 இல் டட்லி - செல்வா ஒப்பந்தத்துக்கு அமையத் தன்னால் மாவட்ட சபைச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட முடியாத நிலையில் டட்லி தன் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்யப் போவதாகத் தெரிவித்தார். அப்போது தந்தை செல்வா அதைத் தடுத்து டட்லி தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அது தொடர்பாக எஸ்.ஜே. வி. செல்வநாயகம் தமிழரசுக் கட்சித் தொண்டர்களிடம் உரையாற்றும்போது "ஆளும் கட்சியை விட மோசமான இனவாதத்தைக் கொண்ட எதிர்க்கட்சி ஆட்சிக்கு வராமல் தடுக்க வேண்டும். அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்துவது தமிழர்களின் நலன்களை மேலும் மோசமாக்கி விடும். எனவே பிரதமருக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளேன்" எனக் கூறியிருந்தார்.

அதாவது ஐக்கிய தேசியக் கட்சியைத் தொடர்ந்து ஆட்சியில் வைத்திருப்பதற்காகத் தந்தை செல்வா தமிழர் நலன்களை விட்டுக் கொடுத்தார். அதே பாதையில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் காப்பாற்றத் தமிழ் மக்களின் நலன்களை விட்டுக் கொடுக்கின்றனர். அதாவது கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைக் காப்பாற்றத் தமிழ் மக்களின் உரிமைகள், உரிமைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் பலி கொடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்குக் காரணமாக அவர்கள் காட்டும் இனவாத பூதங்கள் அன்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இன்று மஹிந்த ராஜபக்ச.

இதேவேளையில், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய தேசிய முன்னணி அரசில் ஒரு பங்காளியாக இருந்தபோதும் அவர்கள் தமிழ் மக்களின் நலன்களுக்குப் பங்கம் வரும்போது எவ்வித விட்டுக் கொடுப்புமின்றி நிமிர்ந்து நிற்கின்றனர். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனோ கணேசனிடம் இருந்து கற்றுக் கொண்டாவது தமிழ் மக்களின் அபிலாசைகள் விடயத்தில் விட்டுக் கொடுப்பின்றி முன் செல்ல வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். ●

# “போலி சுதந்திரதினம் எமக்கு வேண்டாம்!”

## யாழ். நகரில் ஓங்கி ஒலித்த குரல்கள்

கள ரிப்போர்ட்




**செல்வநாயகம் ரவிசாந்**
**குப்பிழான்**

சுதந்திர தினத்திற்கு எதிப்புத் தெரிவிக்கும் வகையில் யாழ். பிரதான பேருந்து நிலையம் முன்பாக மாபெரும் கண்டன கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று சுதந்திர தினமான கடந்த 04 ஆம் திகதி திங்கட்கிழமை நடாத்தப்பட்டது. சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் “போலி சுதந்திர தினம் எமக்கு வேண்டாம்” எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும், காணாமல் ஆக்கப்பட்ட உறவு களின் தகவல்களை உடன் வெளிப் படுத்துமாறும் வலியுறுத்தப்பட் டது. அத்துடன், அரசியல், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எனப் பெருமளவானோர் உணர்பூர்வமாக கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் “அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்!”, “நீதியை நிலைநாட்டு!”, ‘காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தகவல்களை உடன் வெளிப்படுத்து!” என்ற கோஷங்களை தமிழ், சிங்கள மொழிகளில் சுலோகங்களாக எழுதித் தமது கைகளில் தாங்கி கடும் எதிர்ப்பில் ஈடுபட்டனர். அத்துடன் இது தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து இலங்கையின் சுதந்திர தினத்திற்கு எதிராகவும், அரசாங்கத்திற்கு எதிராகவும் உரத்துக் குரலும் எழுப்பினர். அதுமாத்திரமன்றி மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தித் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்த தகவல்களின் தொகுப்பு இது.

**சுதந்திரம் தொடர்பில் பல்வேறு கேள்விகள் உள்ளன**

**- சம உரிமை இயக்கத்தின் செயற்பாட்டாளர் எஸ். கிருபாகரன்**

இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 71 வருடங்களான போதிலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சுதந்திரம் தொடர்பான பலவேறு கேள்விகள் உள்ளன. யுத்தம் முடிவடைந்து சுமார் பத்து வருடங்களாகியும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவோ, அரசியல் கைதிகள் தொடர்பாகவோ இன்று வரை தீர்க்கமானதொரு முடிவை அரசாங்கம் எடுக்கவில்லை.

சிங்கள இனவாதக் கட்சிகளும், தமிழ் அரசியல் கட்சிகளும் இதுவரை காலமும் தங்களுடைய அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்காக அரசாங்கத்தைப் பயன்படுத்தினார்களே தவிர உண்மையான எமது மக்கள் பிரச்சினைக்காக இதுவரை காலமும் குரல் கொடுக்கவில்லை. எனவே, சம உரிமை இயக்கத்தினராகிய நாங்கள் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை வெளிப்படுத்தும் விதமாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை ஏற்பாடு செய்து நடத்துகின்றோம்.

தற்போது காணப்படும் சுதந்திரம் போலியானது என்பதை அரசாங்கத்திற்கு அறிவிக்கும் வகையில் நாம் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்துப் பல வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் தற்போது வேறொரு பெயரில் சுதந்திர தினத்தைக் கொண்டாட அரசாங்கம் முனைப்புக் காட்டுகின்றது. நாளை இந்த நாட்டை ஆட்சி செய்பவர்களின் பெயரால் கூட சுதந்திர தினம் கொண்டாடப்படலாம்.

ஆனால், இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டுமென்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். இதனை வெளிப்படுத்தும் முகமாகவே யாழ். மாவட்டத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்து நடத்துகின்றோம். இந்தப் போராட்டத்தில் சாதி, மத, இன, மொழி வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டுள்ளனர் என்றார்.

**தமிழ் மக்களை மறந்து செயற்படும் அரசாங்கம்**

**- அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ். சிவநேசன்**

இலங்கையில் யுத்தத்துக்கு முன்னரும், யுத்தத்துக்குப் பின்னரும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும். அதுமாத்திரமன்றி இது தொடர்பான தீர்வையும் அரசாங்கம் முன்வைக்க வேண்டும், அரசியல் கைதிகளை உடனடியாக அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் ஆகிய இரண்டு பிரதான கோரிக்கைகளை நாம் அரசாங்கத்துக்கு முன்வைக்க விரும்புகின்றோம்.

கடந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்த போது இலங்கையிலிருந்து வெளியிடப்பட்டதொரு ஆண்டறிக்கையில் 25 ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இதுதொடர்பில் உரிய தீர்வெதுவும் இதுவரை அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. தற்போதைய அரசாங்கம் கடந்த தேர்தலில் தமிழ்மக்களிடம் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் போது காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுத் தருவோம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் ஆகிய நிபந்தனைகளுக்கு இணங்கியிருந்தார்கள். எனினும், ஆட்சிப் பீடமேறிய பின்னர் தமிழ்மக்களை மறந்து செயற்படுகின்றார்கள் என்றார்.

**இனவாத தீயை வளர்க்கும் அரசியல்வாதிகளுக்கு செய்தி சொல்லும் போராட்டம்**

**- சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் முக்கிய செயற்பாட் டாளர் ச. தனுஜன்**

இலங்கையின் சுதந்திர தினமானது அந்நியர்களான ஆங்கிலேயர்களிடமிருந்து எமது நாடு விடுதலை பெற்றதற்கானதொரு அடையாளமாகக் காணப்படுகின்ற போதிலும் இன்று அது மக்கள் விரோத ஆட்சியாளர்கள் ஆடம்பரமான பெரும் செலவுகளைச் செய்து தமக்கு விளம்பரம் தேடிக்கொள்கின்றதொரு விழாவாக மாற்றமடைந்திருக்கின்றது.

அதிலும் குறிப்பாக யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களாகிவிட்ட நிலையில் அக்கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முறையான புனர்வாழ்வோ, காணாமலாக்கப்பட்டோருக்கான சரியான பதில் வழங்கலோ, அரசியல் கைதிகளின் விடுதலையோ, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் நிலங்களின் முழுமையான விடுவிப்போ, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளக் கோரிக்கையை முன்வைத்த தொடர் போராட்டங்களுக்கான சரியான தீர்வோ முன்வைக்கப்படாத நிலையில் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என நாடு முழுவதும் மக்கள் உண்மையான சுதந்திரத்திற்காக, உரிமைகளை வென்றெடுக்க நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிக் கொண்டிருக்கும்போது காலி முகத்திடலில் இடம்பெறுவது ஒரு போலியான சுதந்திர தினக் கொண்டாட்டமே ஆகும்.

இவ்வேளையில் யாழ்.மண்ணில் சிறுபான்மையினங்களின் கோரிக்கைகளை வலியுறுத்திச் சிங்கள மக்களும் போராடுவது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். எம்மத்தியில் இனவாத பிரிவினைத் தீயை வளர்த்து அதில் குளிர்காய்கின்ற அரசியல்வாதிகளுக்கு ஒரு செய்தியைச் சொல்வதாக இப் போராட்டம் அமைகின்றது என்றார்.

# உணவே மருந்து

## பனங்கட்டி



பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதநீரில் இருந்து தயாரிக்கப்படுவதே பனங்கட்டி. இதை, கருப்பட்டி, பனைவெல்லம் என்றும் சொல்வார்கள். வெறும் இனிப்புச்சுவை மட்டுமின்றி, மருத்துவக் குணமும் நிறைந்தது.

● கல்சியம் மிகுந்திருப்பதால் பற்களும் எலும்புகளும் உறுதியாகும்.

● பருவமடைந்த பெண்களுக்குக் பனங்கட்டி சேர்த்து உளுத்தங்களியும் வெந்தயக்களியும் செய்து கொடுப்பார்கள். இந்தக் களிகள், இடுப்பு வலுப்பெற உதவுவதுடன் கருப்பைக்கும் ஆரோக்கியம் தரும். பனங்கட்டியுடன் எள் சேர்த்து இடித்து அவ்வப்போது சாப்பிடுவதாலும் கருப்பை வலுப்பெறும்.

● கருப்பட்டி, இரத்தத்தைச் சுத்தி கரித்து விருத்தியாக்குவதால் மனமும் உடலும் உற்சாகமாக இருக்கும்.

● நீரிழிவு நோயாளிகள் குறைந்த அளவில் பனங்கட்டியை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

● அம்மை நோய்க்கு பனங்கட்டி மிகச்சிறந்த மருந்து. நோய் எதிர்ப் பானாகவும் தடுப்பானா கவும் செயல்படும்.

● சீரகத்தை வறுத்து, சுக்கு, மிளகு, ஓமம், மல்லி, பனங்கட்டி சேர்த்துக் குடித்தால் உடல் புத்துணர்ச்சி பெறும். வாய்வுத்தொல்லை நீங்கி நன்றாகப் பசியெடுக்கும்.

● பனங்கட்டியில் இரும்புச்சத்து நிறைந்திருக்கிறது. சோர்வு, முடி உதிர்தல், இரத்தச் சோகை போன்றவற்றுக்கு நல்லது.


● இருமல், சளித்தொல்லையால் தவிப்பவர்கள், குப்பைமேனி, துளசி, ஆடாதொடை சாற்றுடன் பனங்கட்டி சேர்த்துச் சாப்பிடுவது நல்லது.

● பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் வயிற்றுவலி குணமாக, பீட்ரூட் மற்றும் மாதுளை ஜூஸில் பனங்கட்டி சேர்த்துக் குடிக்கலாம்.

● உலர்திராட்சை, நிலக்கடலை, செவ்வாழைப்பழம், பசும்பால், பனங்கட்டி கலந்த சாற்றைக் காலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் ஆண்மை அதிகரிக்கும்.

● குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் நிலக்கடலையுடன் பனங்கட்டி சேர்த்துச் சாப்பிட்டால் பால் சுரப்பு பெருகும்.

# எப்போதாவது குடி தப்பில்லையா..?



இப்போதெல்லாம் மது அருந்துவது கொண்டாட்டம் - புதுகலாசாரம். கல்யாண வீடோ, செத்த வீடோ தண்ணிப் பார்ட்டி நிச்சயம். விளைவு குடி நோயாளிகளின் எண்ணிக்கை மிகப்பெருமளவில் அதிகரிக்கிறது. குடிப்பது தவறு என்ற மனநிலை மெல்ல மெல்ல சமூகத்தில் இருந்து மறையும் நிலை உருவாகிறது.

குடிக்கு அடிமையான வர்களில் அநேகர் 'எப்போதாவது குடிப்பதில் தவறில்லை' என்ற சமரசத்துக்கு உட்பட்டவர்களே. எப்போதாவது பார்ட்டியில் மட்டுமே குடிப்பதை 'சோஷியல் ட்ரிங்ஸ்' என்கிறார்கள். இந்நிலை மாறி தினமும் குடித்து குடிக்கு அடிமையாகிறவர்கள் அநேகம்.

'எப்போதாவது குடிப்பதில் தவறில்லை", 'சோஷியல் ட்ரிங்ஸ் எடுக்காவிட்டால் மதிக்க மாட்டார்கள்" என்றெல்லாம் சாட்டுக்கூறி குடிப்பார்கள் இது அவர்களை குடிநோயாளிகளாகவே மாற்றிவிடுகிறது என்கிறார்கள் நிபுணர்கள்.

**ஆபத்து என்ன?**

மது அருந்தப் பழகிவிட் டால் அதன் அளவு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும்: குறையாது. முன்பை விட அதிகம் குடித்தால்தான் போதை ஏறும் என்ற நிலையும் அதிகரிக்கும்.

**பாதிப்புகள்**

தலைவலி, உடல் சோர்வு, உடல் வறட்சி (Dehydration), குமட்டல் போன்ற உடல் உபாதைகள் ஏற்படும்.

அதிகமாகக் குடிப்பதால் பயம்,படபடப்பு, பதற்றம், எரிச்சல், மனச்சோர்வு, மனக் குழப்பம், நரம்புத் தளர்ச்சி, இரத்த அழுத்தம், உடல் பருமன், அல்சர், சமிபாட்டுப் பிரச்சினை, மஞ்சள் காமாலை, தாம்பத்தியப் பிரச்சினைகள், ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

கல்லீரல், சிறுநீரகம், கணையம் போன்ற உள்ளுறுப்புகளும் பாதிப்புக்குள்ளாகலாம்.

**இளம் வயதினரை தாக்குபவை**

இளம் வயது, மூளை வளர்ச்சிக்கான பருவம். மது, அருந்திய சில நிமிடங்களில் மூளைக்குச் சென்று, அது செயற்படும் திறனை உடனடியாகக் குறைத்துவிடும். இதனால் ஞாபகசக்தியில் குறைபாடு, கற்கும் திறனில் குறைபாடு ஏற்படலாம். சிந்தனை மற்றும் செயல்படும் திறன்களையும் பாதிக்கலாம். சிலருக்கு மனரீதியான பாதிப்புகளும் ஏற்படும்.


குடிநோயாளி, உடலளவிலும் மனதளவிலும் மதுவுக்கு அடிமையாகிவிடுவார். அதனால், வாழ்க்கையில் பலவிதப் பிரச்சினைகள் ஏற்பட்டு, தொடர்ந்து குடித்துக்கொண்டே இருக்கும் நிலை ஏற்படும். ஏனெனில், குடியை நிறுத்தினால் அவருக்கு கைநடுக்கம், தூ க்கமின்மை, மனச்சோர்வு போன்ற அறிகுறிகளும் (Alcohol Withdrawal Symptoms) பிரச்சினைகளும் ஏற்படும்.

**தவிர்க்கலாம்... தப்பிக்கலாம்!**

குடிப்பதால் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. குடிப்பதால், உடல் உறுப்புகள் அனைத்தும் பாதிக்கப்படும். குடிப்பது எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாகாது. மாறாக, உடல்நலம், மனநலம் சார்ந்த பிரச்சினைகள் உருவாகத்தான் வழிவகுக்கும். எனவே, 'குடிப்பழக்கம் தவறானது' என்ற உண்மையை உணர வேண்டும். விழிப்பு உணர்வை அதிகரிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு பெற்றோர்கள்தான் முன்மாதிரியானவர்கள் எனவே மது அருந்தும் பழக்கமுடைய பெற்றோர் மதுவைத் தவிர்க்க வேண்டும்.

# கால்பந்தின் ஆபத்து



கால்பந்து" விளையாட்டை அறியாதவர்கள் இருக்க முடியாது. இதில், வீரர்கள் பந்தை காலால் மட்டும் அடிப்பதில்லை. அவ்வப்போது தலையால் பந்தை அடிப்பதுண்டு. ஆங்கிலத்தில் இதை 'Heading' என அழைக்கிறார்கள்.

இதுவரை விளையாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்பட்ட Heading, இப்போது தீவிர விமர்சனத்துக்கு ஆளாகியிருக்கிறது. "கனமான பந்தை, தலையால் அடிக்கடி மோதுவதன் மூலம் மூளை பாதிப்புக்குள்ளாகக்கூடும்" என்கிறார் மூளை பாதிப்புகள் மருத்துவ நிபுணர் டாக்டர் பென்னெட் ஓமாலு (Bennet Omalu).

இந்தப் பாதிப்புகள் உடனே தெரியாமலிருக்கலாம் ஆனால், தொடர்ந்து தலையால் பந்தை மோதிக்கொண்டே இருந்தால், பின்னாள்களில் அவர்களுக்கு மூளை சார்ந்த குறைபாடுகள் ஏற்படக்கூடும். இதற்குச் சான்றாகத் தொழில்முறையில் விளையாடிய பல வீரர்களின் முதுமைக்காலப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுகிறார்கள். குறிப்பாக, "பதினெட்டு வயதுக்குள் இருக்கிற யாரும் பந்தைத் தலையால் மோதவே கூடாது' என்கிறார் டாக்டர் பென்னெட். இதைப் பாடசாலைகள் உடனே கவனிக்க வேண்டும்!



# வாரபலன்

## மேடம்
உங்கள் ராசிக்குச் சந்திரன் இந்த வாரம் சாதகமாக இருக்கிறார் மன சஞ்சலம் தீரும். மன அழுத்தம் அதிகரிக்கும் வேலைப் பழுவைக் குறைத்துக்கொள்வது நல்லது. படித்த படிப்புக்கு தக்கவாறு வேலை கிடைக்கும். எதிர்பாராத பண வரவு உண்டாகும், மனக் குழப்பத்தை தவிர்க்கவும்.

## துலாம்
மனதில் அமைதி நிலவும். சகோதரர்களின் உடல் ஆரோக்கியம். பாதிக்கப்படும். படிப்பில் முன்னேற்றம் உண்டாகும். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. அசையாத சொத்திலிருந்து பண வரவு கிடைக்கும், வியாபாரத்தில் செல்வ வளம் சிறப்படையும்.

## ரிஷபம்
பெற்றோரின் ஆசீர்வாதம் கிடைக்கும். வீட்டை பராமரிக்கும் செலவு உண்டாகும். வெளிநாட்டு தொழில் தொடர்புகள் சிறப்படையும் தரகு வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர்களால் நன்மை கிடைக்கும் வீட்டில் விலையுயர்ந்த பொருள்களை கவனமாக பார்த்துக் கொள்ளவும்.

## விருச்சிகம்
அரசாங்க ஊழியர்களுக்கு பணியிட மாற்றம் உண்டாகும், செய்யும் தொழிலில் வெற்றி கிடைக்கும். அடிக்கடி வெளியூருக்கு செல்லும் நிலை உண்டாகும். நில புலன்களின் மூலம் லாபம் உண்டாகும் கூர்மையான பொருட்களினால் காயம் உண்டாகலாம்.

## மிதுனம்
பக்கத்து வீட்டுக்காரர்களின் செயல்கள் மனதை சங்கடப் படுத்தும். ஆலய தரிசனம் செய்யலாம். தொழில் விருத்தியடையும் பேச்சில் கவனம் தேவை. சொந்தமாக செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். மனைவியால் நன்மை உண்டாகும்.

## தனுசு
வருமானம் அதிகரிக்கும், பேச்சில் அதிகாரம் தூள் பறக்கும். வெளிநாட்டு தொழில் தொடர்புகள் லாபத்தைக் கொடுக்கும். வாரத் தொடக்கத்தில் மனக் கலக்கத்தை ஏற்படுத்தும். உயர் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். பேசியே காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

## கடகம்
வியாபாரம் மூலம் பண வரவு அதிகரிக்கும், வார இறுதியில் மன சஞ்சலம் ஏற்படும். வார். பூர்வீக தொழிலில் முன்னேற்றம் உண்டாகும் புதன் ஏழாமிடத்தில் சஞ்சரிப்பதால் வெளியூர் பயணம் வெற்றியைத் தரும் உயர் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும்.

## மகரம்
அலுவலகத்தில் உயர் அதிகாரிகளினால் மன சங்கடம் ஏற்படும், வார மத்தியில் நடவடிக்கைகள் சாதகமாக இல்லை. அடிக்கடி வெளியூர் செல்லும் நிலை உண்டாகும் புதிதாக வீடு நிலம் வாங்குவீர்கள். சமயோசிதமாக செயல்படுவீர்கள் அடிக்கடி வெளியூர் பிரயாணம் உண்டாகும்.

## சிம்மம்
அலுவலகத்தில் உயர் அதிகாரிகளினால் தொல்லை உண்டாகும், பிறரின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். உடன் பிறப்புகளால் கஷ்டம் உண்டாகும். வியாபாரத்தில் பணம் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். சிறு தூர பயணம் செல்வீர்கள்.

## கும்பம்
இந்த மாதத்தில் தொழில் உத்தியோகம் காரணமாக வெளிநாடு செல்வீர்கள். கோபமான பேச்சினை தவிர்க்கவும் உடன் பிறப்புகளால் நன்மை உண்டாகும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செய்யும் செயல்கள் யாவும் சிறப்படையும்.

## கன்னி
இந்த மாதம் அடிக்கடி உல்லாசப் பயணம் செல்வீர்கள், சொத்துக்களை பராமரிப்பதற்காகச் செலவுகள் செய்வீர்கள். மனதில் அமைதி நிலவும். நெருப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனமாக இருக்கவும். விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## மீனம்
அதிகாரிகளால் தொல்லை உண்டாகும், எதிரிகளின் பணம் கிடைக்கும். மனதில் அமைதி பிறக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்தவும் பேச்சில் இனிமை அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணவரவு சரளமாக இருக்கும், குல தெய்வத்தின் அருள் கிடைக்கும்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நோர்வேயின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட முதலாவது தூய சக்தி மற்றும் சுகாதாரப் பிரயோகம் தொடர்பான சர்வதேச மாநாடு கடந்த 6ஆம் திகதி தொடக்கம் 8ஆம் திகதிவரை யாழ். பல்கலைக் கழகத்திலும் கிளிநொச்சி வளாகத்திலும் நடைபெற்றது.



கிளி நொச்சி - கண்டாவளை கோரக்கன் கட்டுப் பகுதியில் கண்டாவளைப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் ஆடை வடிவமைத்தல் கண்காட்சி இடம்பெற்றது.



வலி.கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பிரிவின் ஆவரங்கால் சமுர்த்தி வலயத்தினர் உகரம் அறக்கட்டளை நிறுவனத்துடன் இணைந்து “உயிர்த்துளி - 2019“ இரத்த தான முகாமை கடந்த 02 ஆம் திகதி வங்கி வளாகத்தில் நடத்தியவேளை...



அகில இலங்கை ரீதியில்நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுக்குட்பட்ட கூடைப்பந் தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 3 ஆம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.



வவுனியா பெரிய கோமளரசங்குளம், யேசுபுரம் பகுதியில் உள்ள சிறு மலையொன்றில் கல்லுடைப்பதற்கு எதிராகத் தொடர் உண்ணாவிரதம் ஒன்று சென்ற வாரம் நடைபெற்றது.



கிளிநொச்சியில் நூலகத்தின் காணியின் எஞ்சிய பகுதியை விடுவிக்கக் கோரியும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அரைகுறையாகப் புனரமைக்கப்பட்ட மத்திய விளையாட்டு மைதானத்தை வவுனியா பிரதேச சபையிடம் கையளிக்கக் கோரியும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

# சுண்டு விரல் என்றால் சும்மாவா?



ஒரு நாள் விரல்கள் ஒன்றோடு ஒன்று சண்டை போட்டுக் கொண்டன. யார் பெரியவர் என்பதுதான் சண்டை. சுண்டு விரலோ அமைதியாக இருந்தது. தங்கள் வீரப்பிரதாபங்களை சொல்லிப் பெருமைப்பட்ட மற்ற நான்கு விரல்களும்சுண்டு விரலைக் கேலி செய்தன. உன்னால் எந்தப் பயனும் இல்லை. நீ இருப்பதே வீண்தான் என்று சொல்லிச் சிரித்தன. அன்றிரவு சுண்டு விரலின் கனவில் கடவுள் தோன்றினார். "தன் படைப்பில் எவரும் தாழ்ந்தவர் இல்லை" என்றார் கடவுள். "என் பயன்தான் என்ன" என்று சுண்டுவிரல் அழாக்குறையாக இறைவனைக் கேட்டது. "என்னை இரு கரம் கூப்பி வணங்கும்போது முதலில் நிற்பது நீதானே?" என்றார் கடவுள். "மரியாதையுடன் ஒருவரையொருவர் வணங்கும்போதும் முதலிடம் உனக்குத்தானே" என்று சொல்லி விட்டு இறைவன் மறைந்து விட்டார்.

எளியவனாக இருப்பதில் எந்தத் தகுதிக் குறைவும் இல்லை. எளிய விடயங்களே நமக்கு வலிமையைத் தருகின்றன.

## சிறுவர் பாட்டு

# உதவும் கத்தி



பென்சில் சீவ உதவிடும்
பெரிய பழத்தை நறுக்கிடும்.
மரத்துப் பட்டையைச் சீவிடும்
வாழை இலையை அறுத்திடும்

ஓலை நறுக்க உதவிடும்
உடைத்த தேங்காய் கீறிடும்
கயிற்றை அறுக்க உதவிடும்
காய்கறிகள் நறுக்கிடும்.

நன்மை செய்ய நித்தமும்
நமக்கு உதவும் கத்தியால்
மனிதர் தன்னைத் தாக்குவது
மறந்தும் செய்தல் ஆகுமோ?


# சூரியன் காலையில் உதயமாகின்றது மாலையில் அஸ்தமிக்கின்றது ஏன்?



சூரியன் உதயமாவதாகவும், அஸ்தமிப்பதாகவும் கூறுகிறோம். உண்மையில்அப்படி நடப்பதில்லை. பூமி சுழல்வதால்தான் அப்படித் தோன்றுகின்றது. ரயில் பயணத்தின்போது, நாம் வண்டியில் உட்கார்ந்திருப்பதாகவும், வெளியே மரம், செடி, கொடிகள் ஓடு வது போல் தோன்றும். அதே போல பூமி சுழன்றாலும், சூரியனே சுழல்வது போலத் தோன்றும். பூமி சுழலும்போது நாமிருக்கும் பாகம் சூரியனுக்கு நேரே வரும். அப்படித் தெரிய ஆரம்பிப்பதே சூரியோதயம். அதன் பின்னர் பூமி சுழல்வதால் நாமிருக்கும் பாகம் சூரியனுக்கு நேராக இல்லாமல் மாறிப்போகும். அப்படிச் சூரியன் மறைய ஆரம்பிப்பதையே சூரிய அஸ்தமனம் என்கிறோம். அஸ்தமனத்திற்கும் உதயத்திற்கும் இடைப்பட்ட காலம் பகல் வெளிச்சமாக இருக்கும். சூரியன் தெரியாத நேரம் இருளாக இருக்கும். இதுவே அஸ்தமனம்.

# அறிவோம் உயர்வோம்

## கண்டங்கள்




கண்டங்களின் பரப்பளவை வைத்து பார்க்கும்போது, ஆசியாக் கண்டமே உலகின் மிகப் பெரிய கண்டமாகும். அவுஸ்திரேலியா கண்டங்களுள்மிகச் சிறியதாக இருக்கின்றது. அன்டார்ட்டிக் கண்டம் தென் முனையைச் சுற்றியுள்ளது. 1895இல் நோர்வே நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டென்ஜென் என்பவர் முதன்முதலாக அன்டார்டிக்கா சென்றார்.

**கண்டங்களின் பரப்பளவு**

| | |
|---|---|
| ஆசியா | 4,39,98,000 ச.கி.மீ |
| ஆபிரிக்கா | 2,98,00,000 ச.கி.மீ |
| வட அமெரிக்கா | 2,43,20,000 ச.கி.மீ. |
| தென் அமெரிக்கா | 1,75,98,000ச.கி.மீ. |
| அன்டாட்டிகா | 1,421,39,000 ச.கி.மீ |
| ஐரோப்பா | 97,00,000 ச.கி.மீ. |
| அவுஸ்திரேலியா | 76,14,500 ச.கி.மீ. |

# இது விடுகதை நேரம்










1. ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?
2. அன்றாடம் தீப்பிடிக்கும். அழகிய மாளிகையில் அறுசுவை விருந்து தயாராகும். அது என்ன?
3. அலறிக்கொண்டு வருவான். அவனைக் கண்டால் அனைவரும் ஒதுங்கி வழிவிடுவர். யார் அவன்?
4. அடிக்கடி தாவுவான். அரசியல்வாதியல்ல. அவன் யார்?
5. அள்ள அள்ளக் குறையாது. ஆனால் குடிக்க உதவாது. அது என்ன?

**பதில்கள்**
1. கொடி 2. அடுப்பு
3. நோயாளர் காவுவண்டி
4. குரங்கு 5. கடல்நீர்

# வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்








# கேள்விக்கென்ன பதில்?

1. மனிதன் சந்திர மண்டலத்தில் காலடி எடுத்து வைத்த தினம் எது?
2. 1969ஆம் ஆண்டை ஐ.நா.சபை எதற்குரிய ஆண்டாக அறிவித்தது?
3. போர்த்துக்கேயர், இலங்கை வந்த காலத்தில் தலைநகரம் எது?
4. தென் அமெரிக்க புல்வெளியை எவ்வாறு அழைப்பர்?
5. ஐரோப்பாவின் மிகச் சிறிய தேசம் எது?



**விடைகள்**
1. ஜூலை 21 , 1969
2. மகாத்மா காந்தியின் நூற்றாண்டாக
3. கோட்டே 4. பம்பாஸ் 5. மொனாக்கோ



# பாவ, புண்ணிய கணக்கு!

கயிலையில் பார்வதி தேவி, அழகிய ஓவியம் ஒன்றை வரைந்தார். அது ஒரு அழகிய ஆண் குழந்தையின் படம். பௌர்ணமியன்று வரையப்பட்டதால் முகமெல்லாம் பொலிவுடன் காணப்பட்டது. அது நிஜம் போலவே காணப்பட்டது. பார்வதி தேவி வரைவதை அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஈசன், இந்த ஓவியம் உருவம் பெற்றால் அழகாக இருக்குமே என்று கூறினார்.

அன்னையோ ஓவியம் எப்படி உயிர் பெறும் என்று கேட்டார். ஈசன் அந்த ஓவியத்தைத் தன் முகத்தருகே கொண்டு சென்று முத்தமிட, அந்தக் கணமே கண்ணை இமைத்துக்கொண்டு, கை, காலை அசைத்து சிணுங்கிச் சிரித்தது அக்குழந்தை.

அற்புதங்களைச் செய்யவல்ல ஆடல் வல்லான் ஆயிற்றே ஈசன். இந்த அற்புதத்தையும் நிகழ்த்த, ஆச்சரியமடைந்த அன்னை அக்குழந்தைக்கு, சித்திரத்திலிருந்து வெளிவந்ததால் சித்திரகுப்தன் என பெயரிட்டு அழைத்தார். குழந்தை அழகாய் வளர்ந்து அதி உன்னதமான அறிவுச் செல்வத்துடன் வளர்ந்தது.

ஜீவன்களின் பாவ, புண்ணியத்தை கணக்கிட, திறமையான ஒருவர் தேவை என ஈசனிடம் கேட்டார் யமதர்ம ராஜன். இந்த வேலையைத் துல்லியமாகச் செய்யக்கூடியவர் சித்திரகுப்தன்தான் என்று கூறினார் ஈசன். சித்திரகுப்தன் ஒரு கையில் எழுதுகோலும், மறு கையில் எழுதுகோலுக்குத் தேவையான மையும் கொண்டு காட்சி அளித்தார்.

இவர் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டே மக்களுக்கு இன்ப, துன்பங்கள் வாழ்வில் ஏற்படும். இவர் பாவங்களைத் தள்ளுபடி செய்யும் அதிகாரமும் பெற்றவராம். எனவே இவரைத் தொழுதால் துன்பங்களில் இருந்து விடுபடலாம் என்பது ஐதீகம்.


# சுய தியாகத்தின் எல்லை

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக, கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையை பரலோகத் தந்தைக்கு அர்ப்பணிக்கவே தெரிவு செய்திருக்கிறார்கள்.

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையைத் தினமும் சுமந்து கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக்கா 9:23) என்ற இயேசுவின் வார்த்தைகளை தங்கள் இதயத்தில் பதிய வைத்திருக்கிறார்கள். ஆம், கிறிஸ்தவர் ஒருவரது வாழ்க்கையில் சுய தியாகம் மிகமுக்கியமானது. ஆனால் அது வறுமையோ துன்பமோ நிறைந்த வாழ்க்கை அல்ல.

மாறாக, மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்த வாழ்க்கை. நல்ல வாழ்க்கை. ஏனென்றால் அது கொடுப்பதை உட்படுத்துகிறது, அதனால் இயேசு "வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதிலேயே அதிக மகிழ்ச்சி கொள்ளுங்கள்" (அப்போஸ்தலர் 20:35) என்று இயேசு கூறினார். அதனால் உங்கள் வாழ்க்கையைக் குழந்தைகளுக்காக கொடுப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள். ஆனால் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காக உங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்ளத் தேவையில்லை என்கிறது பைபிள்.

பொருளா தாரத்தில் முன்னேற வேண்டும், வெற்றி பெற வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை பிள்ளைகள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தும்படி விட்டுவிடுகிறோம். உயர் கல்விக்காக பெற்றோர்கள் சிலர் மிகக் கடினமாக உழைத்து பணத்தை சேமித்து வைக்கிறார்கள். இதற்காக சிலர் கடனும்கூட வாங்குகிறார்கள்.



கொலை, துன்புறுத்தல் தவிர பூமியின் அனைத்து தொழில்களையும் பரலோகத் தந்தை ஆசீர்வதித் திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.


# நல்ல செயலின் ஆரம்பம்

கருமையாய் பூமியில் படர்ந்திருந்தது மதீனா மாநகரின் பேரீச்சம் பழ மரங்களின் நிழலில் தோழர்கள் புடைசூழ நபிகளார் அமர்ந்திருந்தார். அப்போது சிலர் அங்கு வந்தார்கள். அவர்கள், முரட்டுக் கம்பளியை போர்த்திருந்தனர்.

அணியக்கூடப் போதிய ஆடை இல்லாமல் அரைநிர்வாணிகளாக இருந்தனர். அவர்களின் வறுமை நிலையைக் கண்டு நபிகளாரின் திருமுகம் வருத்தத்தால் வாடியது. நிலைக்கொள்ளாமல் பக்கத்திலேயே இருந்த தமது வீட்டுக்குள் செல்வதும், வெளிவருவதுமாய் இருந்தார். வந்தவர்களுக்கு உதவி செய்ய முடியாத தனது ஏழ்மை நிலைமை அவரை இன்னும் வருத்தமுறச் செய்தது.

இந்நிலையில் தொழுகை நேரம் வந்தது. நபிகளார், நபித்தோழர் பிலாலை அழைத்தார். தொழுகைக்கான 'அழைப்பு' விடுக்கச் சொன்னார். தொழுகையை முன்னின்று ஒருங்கிணைத்தார். தொழுகை முடிந்ததும் கூடியிருந்த மக்களிடையே நபிகளார் அறக்கொடைகளின் சிறப்பை வலியுறுத்தி, கேட்போரின் நெஞ்சைத் தொடும்வண்ணம், சிற்றுரை ஒன்றை நிகழ்த்தினார்.

மனிதர்கள் அனைவரையும் ஒரே



ஆன்மாவிலிருந்து படைத்து, அதிலிருந்து துணையை உருவாக்கி அந்த இரண்டின் மூலம் உலகில் மனித உயிர்களைப் பரவச்செய்த இறைவனுக்கு அஞ்சும்படியும், ஒருவருக்கொருவர் உதவி வாழும்படியும் இறையச்சம் ஊட்டும் திருக்குர்ஆனின் சில வசனங்களை ஓதிக் காட்டினார்.

"மக்கள் தான, தர்மங்கள் செய்ய வேண்டும். அதற்காக, இருப்போர் பொற்காசுகளையும், வெள்ளிக்காசுகளையும் வாரி வழங்கிட வேண்டும். துணிமணிகளை அளித்திட வேண்டும். தானியங்களை வைத்திருப்போர் ஒரு மரக்கால் அளவு, கோதுமை, பேரீச்சம் பழங்களை தர வேண்டும். எதுவுமே இல்லாதோர் பேரீச்சம் பழத்தின் பாதி துண்டையாவது வழங்கிட வேண்டும்!" என்று அறக்கொடைகளின் சிறப்பை அழுத்தமாக வலியுறுத்தினார்.

நபிகளின் உரையைக் கேட்டு, ஒருவர் சுமக்க முடியாத அளவு எடையுள்ள ஒரு பெரிய கோணி நிறைய தானியங்களை சுமந்து வந்தார். அதன்பின் மக்கள் ஒருவர் பின் ஒருவராக ஆர்வத்துடன் தர்மம் செய்ய ஆரம்பித்தனர். நபிகளாரின் நல்லுரையின் தாக்கத்தால் வெகு விரைவிலேயே அங்கு இரு குன்று அளவுக்குத் தானியங்கள் மற்றும் துணிமணிகள் சேர்ந்துவிட்டன.

மக்கள் பேரார்வத்துடன், தர்மம் செய்வதைக் கண்டு நபிகளாரின் திருமுகம் பொன்னிறமாய் பிரகாசித்தது. "மக்களே! நல்லதொரு வழிமுறையைச் செயற்படுத்தும் ஒருவருக்கு அதற்கான கூலி இறைவனிடம் கிடைக்கும். அதனால், தூண்டப்பட்டு நற்செயல் செய்வாரின் நன்மைகளின் கூலியும் உபரியாக அவருக்குக் கிடைக்கும்.

அதேபோல, தீய வழிமுறையை நடைமுறைப்படுத்துவோர்க்கு அதற்கான பாவம் அவனைச் சாரும். அந்தத் தீமைகளைப் பின்பற்றி வழிகெட்டு போனவர்களின் பாவங்களும் அதை செயல்படுத்த ஆரம்பத்தில் தூண்டியவனின் வினைப்பட்டியலில் இன்னும் உபரியாக சேர்க்கப்படும். அதனால், நீங்கள் நல்லவற்றையே செய்யுங்கள்!" என்றார்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இரத்தவெறிக்கு மட்டக்களப்பில் அழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் விவரம்:

வீரவேங்கை : நரேஸ்
(ஏபிராகாம்லிங்கன், விஜயசுதன், பாஷையூர், யாழ்ப்பாணம்.) 24.12.1986

வீரவேங்கை லத்தீப் முகமது
(அலியார் முகமது லத்தீப் ஒல்லிக்குளம், காத்தான்குடி, மட்டக்களப்பு) 24.12.1986

மேஜர் பிரான்சிஸ்
(இராசையா சடாட்சரபவன், கோட்டைக்கல்லாறு) 31.10.1988

லெப். அனிதா
(சித்திராதேவி தம்பிராசா, ஆரையம்பதி, மட்டக்களப்பு) 28.01.1988

வீரவேங்கை பாண்டியன்
(அருள் டேவிட், தாழங்குடா) 20.02.1988

வீரவேங்கை றிஸ்வான்
(மாமாங்கம் தெட்சணாமூர்த்தி, திருப்பழுகாமம்) 17.03.1988

வீரவேங்கை யூலி யூலியன்
(புத்தூர்) 20.03.1988.

லெப். அரசன் இராம்குமார்
(தாமரைக்கேணி) 25.03.1988

வீரவேங்கை ஈஸ்வரன்
(தம்பிராசா ஆழ்வார்போடி, புதுக்குடியிருப்பு) 13.04.1988

வீரவேங்கை மகேஸ்
(பாலகிருஸ்ணன் மகேஸ்வரன், கோட்டைக்கல்லாறு) 02.06.1988

வீரவேங்கை உதயன்
(ச.இன்பராஜ் மாமாங்கம், மட்டக்களப்பு) 24.06.1988

வீரவேங்கை குரு
(சித்திரவேல் சத்தியநாதன் 37 ஆம் கிராமம்) 28.06.1988

வீரவேங்கை நோபேட்
(நல்லையா சிறீபாலன் ஆரையம்பதி) 03.07.1988

வீரவேங்கை காளி
(ஞானசேகரம் சின்னத்தம்பி பழுகாமம்) 06.07.1988

வீரவேங்கை குருசாமி
(கா.இரத்தினசிங்கம் களுதாவளை) 14.08.1988

வீரவேங்கை வினோபா
(க.ஜெகதீஸ்வரன் களுவாஞ்சிக்குடி)14.08.1988

வீரவேங்கை முரளி
(பீதாம்பரம் நந்தகுமார் ஆரையம்பதி) 12.1988

மட்டுநேசன்

'எனக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படுமானால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணத்தால் நானும் நிபாயாவும் கடத்தப்பட்டமை, நிபாயா காணாமல் போகச் செய்யப்பட்டமை பற்றி நீதிமன்றில் சாட்சியமளிக்கத் தயாராகவுள்ளேன்' இவ்வாறு தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு அரசடியைச் சேர்ந்த செல்வி சுகுணா. காத்தான்குடியைச் சேர்ந்த நிபாயா தனது தோழி சுகுணாவுடன் சேர்ந்து துவிச்சக்கரவண்டி ஒன்றை வாங்க 1988 இல் மட்டக்களப்பு நகருக்கு சென்றார். அச்சமயம் இரா. துரைரெட்ணத்தால் இவர்கள் இருவரும் விசாரணைக்கென கூட்டிச் செல்லப்பட்டனர். தமது வாகனத்தில் வருமாறு இரா. துரைரெட்ணம் பணித்தபோதும் நாங்கள் சைக்கிளில் வருகிறோம் என சுகுணாவும் நிபாயாவும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். பணிமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது தொலைத்தொடர்புக் கருவியொன்றில் 'சுதந்திரப் பறவையைக் கொண்டுவந்துள்ளோம்' என ஒருவர் வேறொருவருக்குத் தகவல் சொல்வதை இருவரும் கேட்டுள்ளனர். அங்கு நடந்த மிகக் கொடூரமான சித்திரவதைகளின்போது சுகுணா மயங்கி விட்டார். நிபாயாவை நன்கு தெரிந்த சைக்கிள் கடைக்காரர் கொடுத்த தகவலின் அடிப்படையில் மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தலைவர் வண.பிதா சந்திரா பெர்னாண்டோ இவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டார்.


அது இந்திய இராணுவ காலமாகையால் அவர்கள் அறிவித்த ஊரடங்கு அமுலில் இருந்தது. எனினும் வண.பிதா தொடர்ந்து அழுத்தம் கொடுத்தமையால் குறிப்பிட்ட முகாமுக்கு வண.பிதாவையும் அழைத்துக் கொண்டு சென்றனர். அங்கு மயக்க நிலையில் சுகுணா மட்டும் காணப்பட்டார். நிபாயவைப் பற்றிய தகவல் தெரியவில்லை. கடந்த வருடம் வட, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் பொன். ராம் ராஜகாரியர் வெளியிட்ட தகவல் ஒன்றின் மூலமே பாலியல் வன்புணர்வின் பின்னர் நிபாயா கொன்று புதைக்கப்பபட்டார் என்பதை அறிய முடிந்தது. 'வந்த பெருநிதியை முக்கியமானவர்கள் தமக்கும் தம் உறவுகளுக்கும் முடக்கியபின் எஞ்சியதை ஏனையவர்க்குப் பகிர்கையில் பலதும் நடந்தது. காத்தான்குடி பெண்ணை இச்சைக்காக சுகித்துப் புலி என மண்ணுள் புதைத்து மாகாண சபைக்கு வந்தவன்" என முகநூலில் குறிப்பிட்டிருந்தார் ராம். 'பிறின்ஸ் காசிநாதர் அவர்கள் வாழும்போதே நினைவு மீட்கும் என் பதிவு" என்ற தலைப்பில் இது வெளியாகியிருந்தது. (rajmali@hotmail.co.uk)


நிபாயா - சுகுணா கைது செய்யப்பட்டமைப பற்றி இந்தியப் படையினரிடம் முறைப்பாடு செய்த வண.பிதா சந்திரா பெர்னாண்டோ 06 ஜூன் 1988 அன்று ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள மாதா தேவாலயத்தினுள் வைத்தே இவரைக் கொன்றனர். 1990 ஆம் ஆண்டு இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதும் இராணுவ துணைப் படையாக விளங்கிய ராஸிக் குழுவில் அங்கம் வகித்த இரா. துரைரெட்ணம் மட்டக்களப்பு மண்ணில் மீண்டும் கால் பதித்தார். இதனால் சுகுணா மட்டக்களப்பு நகரை விட்டு வெளியேற நேர்ந்தது. தற்போது புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் இவர் தனக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமானால் நிபாயாவுக்கு நிகழ்ந்த அவலம் குறித்து நீதிமன்றில் சாட்சியமளிக்கத் தயார் எனத் தெரிவித்துள்ளார்.


இந்தக் கொடூரங்களுக்குக் காரணமான இரா. துரைரெட்ணம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மாநாட்டில் முன்வரிசையில் அமர்ந்திருந்தார். இம்மாநாட்டில் வரலாற்றுக் குறிப்பேடு என்று ஒரு சிறுநூலை வெளியிட்டனர். இதில் புலிகள் தம் மீது தாக்குதல் நடத்தியதாக குறிப்பிட்டுள்ளனர். எனினும் யாழ்ப்பாணத்தில் புலிகளின் முகாமுக்குப் பாதுகாப்பாக நின்ற சுரேன் (திருச்சிற்றம்பலம் சுரேந்திரன் - நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்) என்ற போராளியைச் சுட்டுக் கொன்றதில் ஆரம்பித்த படுகொலைகள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஈரோஸ் இயக்கத்தவரைக் கொன்றதைக்கூட மறந்து விட்டனர்.

'திம்பு பேச்சுக் காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மத்திய குழு உறுப்பினரும் அதன் செயலாளர் நாயகமும் புரட்சி இராணுவக் கமிசன் தலைவருமான தோழர் க.பத்மநாபா என்று சில இராணுவப் பதக்கங்கள் சூட்டிய படத்துடன் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. 'பேச்சுவார்த்தையும் போர் நிறுத்தமும்' என்ற





வண.பிதா சந்திரா பெர்னான்டோ


அதிபர் கணபதிப்பிள்ளை


வனசிங்கா





இரா.துரைரெட்ணம்

தலைப்பிலான அந்தப் புத்தகத்தின் 18 ஆம் பக்கத்தில் இந்தியா தனது நலனில் இருந்து எமது போராட்டத்தை அணுகுகிறது எனச் சிலர் எல்லாம் தெரிந்தது மாதிரி சொல்கின்றனர். அப்படியே தனது நலனிலிருந்து இந்தியா இப்போராட்டத்தை அணுகுகிறது என்று வைத்துக் கொள்வோம் அதில் என்ன தவறு?' எனக் கேட்டிருந்தார். தோழர் பத்மநாபா இவ்வாறு ஒரு நூலை வெளியிட்டமை பற்றி இந்த வரலாற்றுக் குறிப்பேட்டில் குறிப்பிடப்படவில்லை. அதற்கு நிச்சயம் மறதி கார்ணமாக இருந்திருக்க முடியாது.

இன்று முன்னாள் எம்.பி. பசீர் சேகுதாவூத் நிபாயா குடும்பத்தவரைச் சந்தித்துள்ளார். இது குறித்து தனது முகநூலில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். பசீர் சேகுதாவூத் முயற்சியெடுத்து நிபாயாவின் பெற்றோர் மூலம் இநதக் கொலை பற்றி விசாரிக்கப்படுமானால் தான் சாட்சியமளிக்கத் தயார் என சுகுணா தெரிவித்துள்ளார். சூளைமேடு படுகொலை வழக்கில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வீடியோ கொன்பிரன்ஸ் மூலம் சாட்சியமளித்துள்ளார். அதன் மூலம் நீதிமன்று வீடியோ கொன்பிரன்ஸ் சாட்சியத்தை ஏற்றுக் கொள்கிறது என்பது தெளிவாகிறது. நிபாயா குடும்பத்தினரும் பசீர் சேகுதாவூத்தும் இணைந்து முயற்சித்தால் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படக்கூடும். (சுகுணா புலம்பெயர் நாடொன்றில் வசிக்கிறார்)

நிபாயா மட்டுமல்லாது வண.பிதா சந்திர பெர்னாண்டோ, இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் வனசிங்கா (31.03.1989), அதிபர் கனகரத்தினம் (13,05,1988) அதிபர் கணபதிப்பிள்ளை (ஆரையம்பதி), கிராம சேவை அலுவலர் தேவிசுதன் (கொம்மாந்துறை) ஆகியோர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை பற்றி எந்த விசாரணையும் நடந்ததாகத் தெரியவில்லை. களுதாவளையில் முத்துலிங்கம் என்பவரைக் கொன்றுவிட்டு அவரது சடலத்தை வாகனத்தில் கட்டியிழுத்தனர்.

இதேபோல ஆயிரத்துக்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்ட 'தம்பி கொழும்பில்' நாடகத்தின் இயக்குநரும் பிரபல நடிகரும் சிரித்திரன் முதலான பத்திரிகைகளில் நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதியவருமான குமார், தனபால் முதலானோர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டமை பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியில் மிக நீண்டது. இதில் அசோகா ஹோட்டல் படுகொலைகளும் குறிப்பிடத்தக்கவை. யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சமயம் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கண்ணன் (குலசேகரம் நாகேந்திரன் - கணேசபுரம், கிளிநொச்சி), ராசா (சிறாம்பியடி, யாழ்ப்பாணம்) முரசொலி பத்திரிகை ஆசிரியர் திருச்சிற்றம்பலத்தின் ஒரே மகன் அகிலன், பொருளியல் ஆசிரியர் கிருஸ்ணா ஆகியோரின் படுகொலைகளும் யாழ். கல்வி சமூகத்தை அதிர வைத்தது.

இவையனைத்தையும் 'வரலாற்றுக் குறிப்பேடு' என புகைப்படங்களுடன் விபரமாக வெளியிட்டால் முன்னாள் முதலமைச்சர் அதனைக் கையில் வைத்திருக்க முடியாது தடுமாறி விழுந்து விடுவார். அரசியலுக்குப் புதியவரான முன்னாள் முதல்வர் சுரேஸ் பிறேமச்சந்திரனின் சூழ்ச்சிக்குப் பலியாகிவிட்டமை ஏமாற்றமளிக்கிறது. ஒரு கட்சியின் மாநாடு என்று அழைக்கப்பட்டால் அதற்குரிய அளவில் மட்டுமே அவரது பங்குபற்றுதல் இருந்திருக்க வேண்டும். தமக்கு வெள்ளையடிக்க முன்னாள் முதல்வரை பகடைக் காயாக்கியது சரியான செயலன்று.

நிபாயா - சுகுணா சித்திரவதைக்குள்ளான வாவிக்கரை முகாம் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பணியகமாக மாறியது. மீண்டும் ஈ.பி.ஆர்.எல்.எவ். பணிமனையாக இப்போது காட்சியளிக்கிறது. இந்த முகாமில்தான் கடந்த வருடம் மே தின நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி செயலர் கி.துரைராஜசிங்கம் கலந்து கொண்டார். மே நாள் தொழிலாளருக்கானது அதில் கட்சி பேதமின்றி கலந்து கொள்வது தவறல்ல எனினும் இந்த இடத்தில் நிகழ்ந்த பாலியல் வல்லுறவு, சித்திரவதைகள், படுகொலைகள் என்பவற்றை நினைத்திருந்தால் இந்நிகழ்வை வேறு இடத்தில் நடத்துமாறு கட்சிச் செயலர் கோரியிருக்கலாம்.


னசிங்கா


அதிபர் கனகரத்தினம்


கப்டன் பிரான்சிஸ்

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இரத்தவெறிக்கு மட்டக்களப்பில் அழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் விவரம்:

2ம் லெப். மேகன்
(சீனித்தம்பி தயானந்தன்
கல்குடா, வாழைச்சேனை) 22.03.1989

வீரவேங்கை தயாளன்
(கணபதிப்பிள்ளை கோபாலரத்தினம்
துறைநீலாவணை) 16.07.1989

வீரவேங்கை சீராகரன்
(நீலாவணை) 16.07.1989

வீரவேங்கை ஈஸ்வரன்
(ஆரையம்பதி, மட்டக்களப்பு) 16.07.1989

வீரவேங்கை நந்தன்
(சின்னத்தம்பி நந்தகுமார்,
38ஆம் கிராமம்) 14.08.1989

வீரவேங்கை கண்ணன்
(பெரியபோரதீவு)14.08.1989

வீரவேங்கை மகாராஜன்
(வே.தட்சிணாமூர்த்தி )15.08.1989

2ம் லெப். அசோகன்
(க.ஜீவராசா
40ம் கிராமம்) 11.09.1989

வீரவேங்கை முகிலன்
(இராசமாணிக்கம் ஜீவராசா
கோட்டைக்கல்லாறு) 05.11.1989

கப்டன் ஜோன்சன்
(சுந்தரலிங்கம் நிசாந்தன்
சந்திவெளி) 05.11.1989

கப்டன் காதர்
(வைத்தியபிள்ளை கீர்த்திசீலன்
கோயில்போரதீவு) 05.11.1989

வீரவேங்கை சங்கர் (வக்கர்)
(அந்தோனிப்பிள்ளை ஜெயலிங்கம்
மட்டக்கழி) 05.11.1989

வீரவேங்கை நேசன்
(தில்லையம்பலம் ராஜூ
புல்லுமலை) 05.11.1989


வீரவேங்கை வேணு
(குஞ்சித்தம்பி தயாளன்
கொம்மாந்துறை) 06.12.1989

வீரவேங்கை கோத்திரன்
(சமுத்திரன்) ( தவநாயகம்
சந்திவெளி) 11.12.1989

வீரவேங்கை பிரசாத்
(அமரசிங்கம் பேரின்பராசா
எருவில், களுவாஞ்சிக்குடி)
19.12.1989

வீரவேங்கை தாமு (அண்ணாச்சி)
(சின்னத்தம்பி ரணசிங்கம்
ஒல்லிக்குளம்) 23.12.1989

# உஷார்...! ஏ.ரி.எம். மோசடிகள் தப்பும் வழிமுறைகள்



ஏ.ரி.எம். பாவனை இன்று நம்மிடையே அதிகம். எங்கு வேண்டுமானலும் ஏ.ரி. எம். அட்டையைப் பயன்படுத்த வேண்டும் என்பதால் தேவைக்கு மேலதிகமாகப் பணத்தை கொண்டு திரிவதில்லை. இதனால்தான் திருடர்களும் இப்போது தொழில்நுட்பத்தைக் கைக்கொண்டு மோசடிகளில் ஈடுபடுகிறார்கள்.

ஏ.ரி.எம். இல் பணம் எடுக்கும்போது அதில் கருவி ஒன்றைப் பொருத்தி நமது தரவுகளை சேகரித்து போலி அட்டைகளை உருவாக்கிப் பணத்தை அடித்து விடுகிறார்கள் திருடர்கள். இவ்வாறு தங்கள் அட்டைகளில் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது எனப் பலர் மத்திய வங்கிக்கு முறையிட்டுள்ளனர் என அதன் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி கூறியுள்ளார். அரச, தனியார் வங்கிகளின் ஏ.ரி.எம்களில் இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

உங்கள் தகவல்கள் திருடுபோகாமல் இருந்தால் போதும், மோசடிகளைத் தவிர்த்து விடலாம். அவ்வாறான சில வழிமுறைகளை தருகிறார்கள் நிபுணர்கள்.

- பணப் பரிமாற்றம் நடந்ததும் உங்கள் கைபேசிக்கு குறுஞ்செய்தி வருமாறு வங்கிக் கணக்குடன் கைபேசி இலக்கத்தை இணையுங்கள்.
- உங்கள் ஏ.ரி.எம். பரிவர்த்தனைகளை முழுவதும் அந்தரங்கமாகச் செய்யவும், கடவுச்சொல் உள்ளீடு செய்வதைப் பார்க்க யாரையும் அனுமதிக்கக்கூடாது.
- ஏ.ரி.எம். இயந்திரத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஏதாவது கருவிகள் இணைக்கப்பட்டுள்ளதா எனப் பரிசோதியுங்கள்.
- நீங்கள் அல்லது நீங்கள் அங்கீகரிக்காத பணப்பரிமாற்றம் நடந்தால் உடனடியாக அது குறித்து வங்கிக்கு அறிவியுங்கள்.
- பரிவர்த்தனைகளைச் செய்து முடித்த பின்னர், ஏ.ரி.எம் திரையில், வரவேற்புத் திரை உள்ளதா? என உறுதி செய்து வெளியேறுங்கள்
- ஏ.ரி.எம். இல் உங்களைச் சுற்றியுள்ள நபர்களின் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் இடம்பெறுகிறதா என அவதானியுங்கள்.
- வங்கி பரிவர்த்தனை தொடர்பான குறுஞ்செய்திகள் மற்றும் வங்கி அறிக்கைகளை (Bank Statement) தொடர்ந்து சரிபார்க்கவும்.
- ஏ.ரி.எம்.இயந்திரத்தில் பணம் இல்லாத நிலையிலும், பணம் இல்லை எனத் திரையில் தெரிவிக்கவில்லை எனில், அங்குள்ள தகவல் பலகையில் உள்ள எண்ணில் தொடர்பு கொண்டு வங்கிக்குத் தகவல் தெரிவியுங்கள்.
- பணம் எடுத்தவுடன், எவ்வளவு பணம் எடுக்கப்பட்டுள்ளது எனக் குறுஞ்செய்தியை சரிபாருங்கள்.

# வெற்றி மொழி: எச்.பி.லவ்கிராஃப்ட்




1890 ஆம் ஆண்டு முதல் 1937-ம் ஆண்டு வரை வாழ்ந்த எச்.பி. லவ்கிராஃப்ட் அமெரிக்காவைச் சேர்ந்த நாவலாசிரியர் மற்றும் சிறுகதை எழுத்தாளர். தனது செல்வாக்குமிக்க படைப்புகளான திகில் நாவல்களின் மூலமாக பெரும் புகழ் பெற்றவர். இவர் இருபதாம் நூற்றாண்டு திகில் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவர். பின்னாளைய எழுத்தாளர்களுக்கு தூண்டுகோலாக விளங்கியதோடு, இவரது படைப்புகள் பல திரைப்படங்கள் உருவாவதற்கும் அடிப்படையாக விளங்கின. தான் வாழ்ந்த காலத்தை விட, இறப்பிற்குப் பிறகே அதிக புகழையும் பாராட்டுகளையும் பெற்றவர்.

- குழந்தைப் பருவ நினைவுகள் யாருக்கு அச்சம் மற்றும் சோகத்தை மட்டுமே தருகிறதோ அவரே மகிழ்ச்சியற்றவராகிறார்.
- கற்பனை என்பது மிகவும் ஆற்றல் வாய்ந்த விடயம்.
- நினைவுகள் மற்றும் சாத்தியங்கள் ஆகியன யதார்த்தங்களை விட அதிகம் பயங்கரமானவை.
- இயற்கையின் ஒழுங்கை மீறுவதே அனைத்து உண்மையான திகிலின் அடிப்படையாகும்.
- மனிதர்களின் பழமையான மற்றும் வலிமையான உணர்வு பயம்.
- ஒரு கதையின் முடிவானது கண்டிப்பாக தொடக்கத்தை விட வலுவானதாக இருக்க வேண்டும்.
- எந்த யதார்த்தமும் அழகாக இருப்பதாக நான் நினைக்கவில்லை.
- மூளையில் உள்ள ஓவியங்களின் தொகுப்பே அனைவரின் வாழ்க்கை.
- மிகப்பெரிய மனித சாதனைகள் ஒருபோதும் லாபத்திற்காக இருந்ததில்லை.
- உடலின் சக்தியே மனித முடிவுகளின் ஒரே இறுதி காரணியாகும்
- ஒருபோதும் எதையும் விவரித்துக் கூறாதீர்கள்.
- வாழ்க்கை ஒரு பயங்கரமான விடயம்.

# பணம் சம்பாதிப்போமா...!

## செல்வம் சேர்க்கும் இரகசியம்



**ஏன் 10% வருமானம்?**

செந்தில் 10 ஆண்டுகளுக்குமுன் 20 லட்சம் ரூபாயில் 1,000 சதுர அடியில் சொந்தமாக ஒரு வீட்டை வாங்கியிருந்து, இப்போது ஆண்டுக்கு 20ம வருவாயை எதிர்பார்த்திருந்தால், அவரது வீட்டைக் குறைந்தபட்சம் ரூ.1.2 கோடி கொடுத்து வாங்க யாராவது முன்வர வேண்டும். ஆனால், யாரும் முன்வரமாட்டார்கள். காரணம், அதே அளவுள்ள வீடுகள் ரூ.75 லட்சத்திலேயே கிடைக்கும்போது, அதை வாங்க விரும்பமாட்டோம். செந்தில் வாங்கிய வீட்டை ரூ.75 லட்சத்துக்கு விற்றால் அவருக்குக் கிடைக்கும் வருமானம் 14% மட்டுமே.

நமக்குக் கிடைக்கும் நியாயமான வருமானம் என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்தைச் சார்ந்தது. நம் நாட்டின் ஜி.டி.பி வளர்ச்சி ஆண்டுக்கு 8 வீதமாக இருந்தால் மட்டுமே, ஆண்டுக்கு 12% (8% ஜி.டி.பி + 4% உண்மையான வருவாய்) நியாயமான வருவாயை எதிர்பார்க்க முடியும்.

**உண்மையான வருமானத்தைத் தொடர்ந்து பெறுவது எப்படி?**

உங்கள் சொத்தின் ஒரு பகுதியைப் பங்குச் சந்தை தொடர்பான திட்டங்களில் முதலீடு செய்தால் மட்டுமே, உங்களது உண்மையான வருவாய், நீண்ட கால அடிப்படையில் 0.5 வீதத்திலிருந்து 4 சதவிகிதமாக அதிகரித்து, உங்களது ஓய்வுக்கால வருவாய் தேவைகளைச் சமாளிக்க உதவும்.

இந்த வருமானம் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமெனில், சரியான சொத்துக் கலவையை (Right Asset Mix) உருவாக்கி, முதலீடு செய்ய வேண்டும். பலவகையான முதலீடுகள், முயற்சிகள், அவற்றின்மூலம் கிடைக்கும் உண்மையான வருவாய் போன்றவற்றை நாம் புரிந்துகொள்வது அவசியம்.

● ● ●

சொத்து என்றால் நிலம் அல்லது தங்க நகைகள்தான் நம்மில் பலருக்கும் ஞாபகத்துக்கு வரும். ஆனால், சொத்து என்பதை அதன் தன்மை, வருமானம், பணமாக்குதல் (liquidity) போன்றவற்றைப் பொறுத்து சில வகைகளாகப் பிரிக்க முடியும். அதாவது, பணம் மற்றும் மூலதனச் சொத்துகள், தேய்மானம் அடைகிற மற்றும் வளர்கிற சொத்துகள் (Appreciating & Depreciating Assets), அசையும் மற்றும் அசையா சொத்துகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். இந்த மூன்று வகை சொத்துக்களும் ஒவ்வொரு முதலீட்டாளருக்கேற்ற வகையில் சரியான கலவையாக இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

**பணச் சொத்துகள்** (Cash Assets)

பணச் சொத்துகள் என்பது குறுகிய கால மற்றும் நடுத்தர கால அடிப்படையில் அதாவது, மூன்று வருடங்கள் வரை, நமது தற்போதைய தேவைகளுக்குப் பிரதானமாக உதவுவதாக இருக்கும். பணம் என்பது நமக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்களை வாங்கவும், வசதியாக மற்றும் ஆடம்பரமாக வாழவும் உதவுவதால், பணம்தான் 'ராஜா'வாக (Cash is King) பார்க்கப்படுகிறது. அது உணவாகட்டும், சுகாதாரமாகட்டும், கல்வி அல்லது சுற்றுலாவாகட்டும், எதுவானாலும் ஒருவரின் தற்போதைய தேவையை உடனடியாக நிறைவேற்ற உதவுகிறது. (சம்பாதிப்போம்)

# சிறைப்பட்ட சிலந்தி மனிதன்

ஸ்பைடர்மான் உங்களுக்குத் தெரியாதவரல்ல... ஆனால் அவரைப்போல பல சாகசங்கள் காட்டும் பிரெஞ்சு நாட்டு நிஜ ஸ்பைடர்மானை உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?

56 வயதான அலெயின் றொபேர்ட் உலக நாடுகளெங்கும், உள்ள உயரமான கட்டடங்களில் எந்தப் பாதுகாப்பு சாதனங்களும் இல்லாமல் சிலந்திபோல மேலேறி உலகப் புகழ் பெற்றவர். மணிலா நகரில் 200 மீற்றர் உயர கட்டடத்தில் வெற்றிகரமாக ஏறி, கீழே இறங்கியவரை கைது செய்தார்கள் பொலிஸார்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒன்பதாவது அதிஉயர்ந்த இந்தக் கட்டடத்தில் இவர் ஏறியபோது அதிகாரிகள் உட்பட 200 பேர் வரையில் கீழே நின்று இவர் சாகசத்தை பார்த்திருக்கிறார்கள். பலர் வீடியோ படம் எடுத்திருக்கிறார்கள். கறுத்த ஷேர்ட், மஞ்சள் காற்சட்டை, தலையில் பொருத்தப்பட்ட கமரா- இப்படி ஒரு கோலத்தில் கட்டடத்தின் கண்ணாடிச் சுவரில் இலாவகமாக ஏறி, பின்பு ஏறிய வழியிலேயே இறங்கி வந்த இவரை, மக்களிடையே பீதியை உண்டாக்கினார் என்ற குற்றச்சாட்டில், கைது செய்துள்ளார்கள்.

வானுயர்ந்த கட்டடங்களின் உச்சிக்கு ஏறுவது என்பது இவருக்கு அல்வா சாப்பிடுவதைப் போன்றது என்கிறார்கள். அதிலும் வாகன நெரிசல் தெருக்களை நிறைக்கும் நேரங்களில்தான் இவர் தன் சாகசத்தை ஆரம்பிப்பதுதான் வழமை. துபாய் நகரின் 328 மீற்றர் உயரமான புர்ஜ் கலீபா கட்டடம், ஈபிள் கோபுரம் - இவர் கால்கள் பதிந்த சில கட்டடங்கள்.!


© AFP/Getty Images

# அழகியால் பதவியிழந்த மன்னன்

ஜனவரி 31, மலேசியா புதிய மன்னரைக் கண்டிருக்கின்றது. இவர் பெயர் அப்துல்லா சுல்தான் அஹமது. மலேசியாவில் மன்னரின் தலைமையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதமர் மற்றும் துணைப் பிரதமரே நாட்டை நிர்வகிப்பர்.




மலேசியாவில் 9 மாநிலங்களில் அரச பரம்பரையினர் ஆட்சி நடத்தி வருகின்றனர். இக்குடும்பத்தை சேர்ந்தவர்களே, சுழற்சி முறையில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மன்னராக தேர்வு செய்யப்படுகின்றனர். எனவே ஒரு மன்னருக்கு ஆயுட்காலம் ஐந்து வருடங்கள் மாத்திரமே! ஆனால் இந்தத் தடவை ஒரு மன்னர், அவர் 5 ஆண்டுக் காலம் முடியுமுன்பு - அதாவது 2 வருட காலத்தில் தூக்கி எறியப்பட்டிருக்கிறார். ஏன் தெரியுமா?

· 2016 இல் மன்னராக பதவியேற்ற ஐந்தாம் சுல்தான் முஹம்மது, ரஷ்யாவைச் சேர்ந்த 25 வயதான மிஸ் மொஸ்கோ பட்டம் வென்ற ஒஸ்கானா என்ற பெயர் கொண்ட ரஷ்ய அழகியை மணம் புரிந்த சர்ச்சையில், அவரது பதவிக்காலம் முடியும் முன்னர், கடந்த 6ஆம் தேதி பதவி விலகும் நிலை வந்து சேர்ந்தது. இஸ்லாமிய நாடாயிற்றே. ஆளும் மன்னரே தவறு செய்வதை நாடு அனுமதிக்கவில்லை.

**குரு செய்தாலும் குற்றம் குற்றமே**

# இப்படியும் சாப்பிடலாம்...!



வயதாளிகள் குற்றம் புரிவது அதிகரிப்பது, ஒரு நாட்டுக்கு அழகான விடயமல்ல. அதிலும் வறுமையைக் காரணம் காட்டி, ஒரு 69 வயது முதியவர், குற்றமிழைத்து விட்டு ஜெயில் பறவையாவது நாட்டுக்கு நல்லதல்ல. கம்பிகளை எண்ணினாலும், சாப்பாட்டுக்கு வழி கிடைப்பதால் அங்கு போகிறார்களாம். எப்படி இருக்கின்றது கதை? பல வழிகளில் வளர்ச்சி கண்டுள்ள ஜப்பானில்தான் இப்படியொரு நிலைமை.

65 வயதுக்கு மேற்றபட்டவர்கள் குற்றமிழைப்பது என்பது கடந்த 20 வருடங்களில் என்றுமில்லாதவாறு இங்கு அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். "ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு, பூங்காவில் நின்ற ஒரு தம்பதியை மிரட்டினேன். அவர்களை எந்தவிதத்திலும் காயப்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை. இவர்களில் ஒருவர் மிரண்டு, பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும் என்பதே என் விருப்பமாக இருந்தது. விரும்பியது நடந்தது. நானும் சிறைக்குப் போனேன்" என்கிறார் ஒரு 62 வயதான முதியவர்.

முதற் தடவை சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த உந்துருளியை எடுத்துக் கொண்டு அருகிலுள்ள பொலிஸ் நிலையம் சென்று உந்துருளியைத் திருடிவிட்டதாக முறைப்பாடு செய்து இவர் ஜெயிலுக்குப் போயிருக்கிறார். "என் கணவனுடன் நிம்மதியாக வாழமுடியவில்லை. திருடி விட்டு ஜெயிலுக்குப் போய் நிம்மதியாக இருந்தேன்" என்கிறார் ஒரு 70 வயது மூதாட்டி. நடக்கவே முடியாத 80 வயது மூதாட்டிகளும் எதையோ திருடிவிட்டு சிறைக்குப் போகிறார்களாம்...

**நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது?**

# மிரட்டும் போர் தவிக்கும் சிறார்

என்றுமே இல்லாதவாறு, உலகெங்கும் போர்களின் எண்ணிக்கையும், இயற்கை நாசங்களும் மிக அதிகமாக இருக்கின்றன. இதன் எதிரொலியாக பெருமளவு குழந்தைகளின் கதி அதோகதியாக இருக்கிறது என்கிறது ஐ.நா.வின் யுனிசெவ்.

4.1 கோடி பிள்ளைகள் உட்பட, 7.3 கோடி தொகையினரின் உயிர்களைக் காப்பாற்ற 3.9 பில்லியன் டொலர் தொகை தேவை என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். 59 உலக நாடுகளின் அவல நிலை இது! பிள்ளை களுக்கான உரிமைகளை நிலைநிறுத்த - அவையொன்றை ஸ்தாபித்து 30 வருட நிறைவு காண்கின்ற இச் சந்தர்ப்பத்தில், 2019 என்றுமில்லாதவாறு அதிக நாடுகள் யுத்தங்களில் ஈடுபட்ட நிலையில் பிறந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.


குறிப்பாக, சிரியாவின் நிலை படுமோசமாக உள்ளது. இந்நாட்டில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை ஐந்து அயல் நாடுகள் அகதிகளாக ஏற்றுள்ளன. சிரியாவுக்கு அடுத்து ஏமன் நாடுதான் மோசமான நிலையில் இருக்கின்றதாம். இங்குள்ள 10 பிள்ளைகளில் 8 பேருக்கு வெளி உதவி தேவைப்படுகின்றது. இப்படியொரு அவல நிலையில், பணக்கார நாடுகள் உதவிக்கரம் நீட்ட வேண்டுமென இவாகள் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

**இருண்ட கண்டத்தின் இன்னொரு நாடாகிறதோ சிரியா...?**



# சவால்...!

## இதுதான் சவால்...!!




**'10** ஆண்டுகள் சவால்' எனும் புகைப்படச் சவால்தான் கடந்த சில வாரங்களுக்கு முன்பு சமூக வலைதளங்களில் பேசுபொருள். ஒவ்வொருவரும் தாங்கள் 10 வருடங்களுக்கு முன்பு எடுத்திருந்த ஒளிப்படத்தையும் இப்போது எடுத்துள்ள ஒளிப்படத்தையும் ஒப்பீடாக வைத்து 10 வருடங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து பதிவிட்டுக் கொண்டிருந்தனர். தனிநபர்கள் மட்டும் பதிவிட்டுக் கொண்டிருந்த பத்து ஆண்டு காலச் சவாலை இயற்கைக்கு மாற்றினர் இயற்கை ஆர்வலர்கள்.

துருவப்பகுதிகள் உருகுதல், காடுகள் அழிக்கப்படுதல், ஆறுகள், ஏரிகள் ஆக்கிரமிக்கப்படுதல், பிளாஸ்ரிக் கழிவுகளின் அதிகரிப்பு எனப் பல முக்கியமான சுற்றுச்சூழல் பிரச்சினைகளை 10 ஆண்டுகள் இடைவெளி புகைப்படங்களை வைத்துப் பேசுபொருளாக்கினர். இந்த நிலையில் பிரேசிலின் புகழ்பெற்ற ஒளிப்படக் கலைஞர் செபாஸ்ரியோ சால்காடோ (Sebastião Salgado) 20 ஆண்டுகாலச் சவால் என ஒரு புகைப்படத்தை வெளியிட்டிருக்கிறார். 2001இல் வறட்சியாகக் காணப்பட்ட பகுதி இப்போது பச்சை வண்ணம் போர்த்திய இடமாக மாறியுள்ளது. உண்மையில் அவை தானாக மாறவில்லை. தங்களது உழைப்பின் மூலம் மாற்றியுள்ளனர். 20 வருடங்களாகக் காட்டை மறு உருவாக்கம் செய்துள்ளனர் செபாஸ்ரியோ - லீலியா தம்பதியர்.

பிரேசிலின் முக்கியமான ஒளிப்படக்கலைஞரான செபாஸ்ரியோ சால்காடோ (Sebastião Salgado) 45 ஆண்டுகளாக புகைப்படத்துறையில் உள்ளார். 74 வயதுடைய செபாஸ்ரியோ புகைப்பட பத்திரிகையாளர் மற்றும் சமூக ஆவணப்பட புகைப்படக்காரர் எனப் பல்வேறு தளங்களில் பணியாற்றி வருகிறார். உலகின் முக்கியமான விருதுகளையும் பெற்றுள்ளார். அவரது அனைத்துப் புகைப்படங்களும் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள்தாம். அவற்றிலும் சில தனித்தன்மையுடன் காணப்படுபவை. சமகால வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் பலவற்றை தனது கமெராவில் பதிவு செய்தவர். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நபர் தொடர்ந்து சூழல் குறித்து பேசுவதும் இயங்குவதும் தேவையான விடயம்தான்.



90களின் மத்தியில் ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் நடைபெற்ற இனப்படுகொலையை ஆவணப்படுத்திக் கொண்டிருந்தார் செபாஸ்ரியோ. அவரைச் சுற்றி எங்கு திரும்பினாலும் பிணங்கள் மட்டும்தான். செபாஸ்ரியோவின் கல்லூரிக்கால நண்பரும் அவரது குடும்பத்துடன் இனப்படுகொலை செய்யப்பட்டார். இவற்றை யெல்லாம் பார்த்த செபாஸ்ரியோ மனதளவிலும் உடலளவிலும் மிகவும் பாதிக்கப்பட்டார். 1994 ஆம் ஆண்டு பிரேசிலுக்குத் திரும்பினார். பிரேசிலின் மினாஸ் ஜெரைரிஸ் (Minas Gerais) மாகாணத்தில் உள்ள ஐமோரேஸ் (Aimorés) நகருக்கு அருகில் அவரது குடும்பத்திற்கெனக் கால்நடை பண்ணை உள்ளது. மிக நீண்ட நாள்கள் கழித்து ஓய்வுக்காக அங்கே சென்ற வருக்கு மேலும் அதிர்ச்சிதான் காத்திருந்தது. சிறுவயதில் தான் பார்த்த மரங்களும் காடுகளும் அங்கு இல்லை. மரங்களை வெட்டி காடுகளை அழித்திருந்தனர்.

இது குறித்து அவர் கூறுகையில், 'நிலமும் என்னைப் போல் நோய்வாய்ப்பட்டிருந்தது. எல்லாம் அழிக்கப்பட்டிருந்தது. சுமார் 0.5% நிலம் மட்டுமே மரங்களால் மூடப்பட்டிருந்தது. அப்போது எனது மனைவி லீலியா டெலுஸ் வானிக் சால்காடோ (Lélia Deluiz Wanick Salgado) காட்டை மீளுருவாக்கம் செய்வதற்கு யோசனை தந்தாள். நாங்கள் வேலைகளை ஆரம்பித்தோம். கொஞ்சம் கொஞ்சமாக மரங்கள் நட்டு காட்டை மீளுருவாக்கம் செய்தோம். காடு பிறந்தது மட்டுமல்ல நானும் புதியதாய்ப் பிறந்தேன்" என்கிறார் செபாஸ்ரியோ.

அந்தச் சம்பவம் குறித்து அவரது மனைவி லீலியா கூறுகையில், 'காட்டை உருவாக்குவதை விட எனது கணவரைக் குணமடையச் செய்ய வேண்டி இருந்தது. நிலத்தைச் சரி செய்வதன் மூலம் அவர் தானாகவே குணமடைவார் என நம்பினேன். இது அவருக்கும் தெரியும்" என்கிறார்.

மண் முற்றிலும் பாதிக்கப்பட்டுவிட்டது எனக் கூறியபோதும் எந்தப் பகுதியையும் மீட்டெடுக்க முடியும் என்ற புரிதலும் நம்பிக்கையும் அவசியம் என்கிறார் செபாஸ்ரியோ. ஆரம்பத்தில் 20, 30 வேலையாட்களை வைத்துக் கொண்டு மரங்களை நடத் தொடங்கினர். 1999 மழையில் ஹெக்ரெயருக்கு 2000 மரங்களின் விதைகளை விதைத்திருந்தனர். அவற்றில் அத்தி மர வகைகள், பிரேசில் பகுதி மரங்கள் என உடனடியாக வளர்ந்து இளம் வயதில் பட்டுப் போகும் வகை மரங்களாக இருந்தன. இவற்றை வளர்ப்பதன் மூலம் மண்ணின் தன்மையை பழைய நிலைமைக்குக் கொண்டு வர முடியும். நிழலும் கிடைக்கும். அவர்கள் முதல் முறை விதைத்த ஐந்தில் மூன்று பங்கு விதைகள் மண்ணிலேயே புதைந்து போயின. இதற்காக வருத்தப்பட்டாலும் தொடர்ந்து கவனம் செலுத்தி அதை அடுத்த வருடத்திலேயே விதை இழப்பு 20% ஆகக் குறைக்கப்பட்டது. தற்போது அந்த இழப்பு சதவீதமும் 10% ஆகக் குறைக்கப்பட்டுவிட்டது.

இதற்கிடையில் 1998 இல் இன்ஸ்டிட்யூஷன் டெர்ரா (Instituto Terra) எனும் அமைப்பை செபாஸ்ரியோவும் லீலியோவும் ஆரம்பித்தனர். காடுகளை மீட்டெடுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்பு உணர்வைக் கொடுப்பதற்கும் இந்த அமைப்பு பயன்பட்டது. இந்த அமைப்பின் மூலம் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க முடிவெடுக்கப்பட்டு பெப்ரவரி 19, 2002 இல் இன்ஸ்டிட்யூஷன் டெர்ராவில் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் மீட்பு மையம் (Center for Environmental Education and Restoration) ஆரம்பிக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு செயல்முறைக்குப் பங்களிப்பதும், அட்லாந்திக் வனத்தின் நிலையான வளர்ச்சிக்கு உதவுவதும் டோக் (River Doce) ஆற்றின் வடிநிலங்களில் சிறப்புக் கவனம் செலுத்துவதும்தான் இவற்றின் முக்கிய குறிக்கோள்கள். 2012 இற்குள் 700 கல்வித்திட்டங்கள் மேம்படுத்தப்பட்டன. டோக் ஆற்றின் பள்ளத்தாக்கின் 170 நகராட்சிகளில் 65,000 மக்களுக்கு இவை பயனுள்ளதாக இருக்கும்.

1998 இல் அழிந்துபோய் இருந்த 1740 ஏக்கர் மலைக்காடுகள் நிரம்பிய நிலத்தில் 1502 ஏக்கர் மலைக் காடுகளை மறு உருவாக்கம் செய்துள்ளனர். இதற்காகத் தனியார் பாரம்பரிய இயற்கைப் பாதுகாப்பு மையம் (Private Natural Heritage Reserve) என்ற பெயரைப் பெற்றுள்ளனர். இதுவரை 20 லட்சம் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 290 இற்கும் மேற்பட்ட உயிரின வகைகள் அங்கு வாழ்கின்றன. பறவைகளில் 172 இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு இனங்கள் அழிந்து வரும் நிலையில் இருப்பவை. அதேபோன்று 33 வகையான பாலூட்டி இனங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு அழிந்து வரும் வகையைச் சேர்ந்தவை. காடுகளை மீட்டுருவாக்கம் செய்யும்போது மரங்களை வளர்ப்பதில்கூட மண்ணுக்கேற்ற மரங்களை வளர்ப்பதில் கவனமாக இருக்கிறார்கள். அப்போதுதான் சூழலைச் சமநிலையைக் கையாள முடியும்.

2015 பரிஸ் காலநிலை மாநாட்டில் செபாஸ்ரியோ பேசும்போது, 'ஒருவேளை நம்மிடம் இதற்கான தீர்வு இருக்கலாம். கார்பனீர் ஒட்சைட்டை ஒட்சிசனாக மாற்றக்கூடிய ஒன்று மரங்கள் மட்டுமே. நாம் காடுகளை மீண்டும் வளர்க்க வேண்டும். அந்தந்தப் பகுதிகளுக்கு உரிய மண்ணுக்கான மரங்களைக் கொண்டு காடுகள் அமைய வேண்டும். அவைதான் இயற்கைச் சூழலுக்கானவை. மேலும் அந்தந்த மண்ணின் மாந்தர்களின் வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். இயற்கைக்கும் பூமிக்கும் எதையாவது திருப்பி அளிக்க வேண்டும்" என்கிறார். இவற்றைவிடப் பெரிய ஆச்சரியம் செபாஸ்ரியோவும் லீலியோவும் காடு இருக்கும் பகுதியை இப்போது வரை சொந்தம் கொண்டாடவில்லை.



# பெட்டகம்

பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்காக வசதி படைத்தவர்களின் வீடுகளில் பெட்டகம் பயன்பாட்டில் இருந்தது. பெறுமதியான பொருட்களை இதனுள் பூட்டி வைப்பர்.

பெரும் வசதி படைத்தவர்களின் வீடுகளில், ஆலயங்களில் இருந்த பெட்டகங்களில் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்து இருந்தன.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பெட்டகம் பாவனையில் இருந்தது. நெல் போன்ற தானியங்களை சேமிப்பதற்கும் பெட்டகம் பயன்பட்டது.

# பலகை அடித்தல்

நெல் விதைப்பின் போது தண்ணி விட்டு, மண்ணைப் பாறச் செய்து, பின்னர் உழுவார்கள். உழவின் பின் தரையை மட்டப்படுத்தியே நெல் விதைக்கப்படும். இல்லையேல் பாய்ச்சும் நீர் சீராகப் பரவாது. வழிந்தோடவும் மாட்டாது. இதற்காக தற்போது பெரும்பாலும் உழவு இயந்திரங்கள் பாவிக்கப்படுகின்றன. எனினும் முன்னர் மாடுகளைக் கொண்டு கலப்பையை வைத்து உழவு, மட்டப்பலகையால் பலகை அடித்து தரை மட்டப் படுத்தப்பட்டது. மட்டப்படுத்திய பின் விசிறல் மூலம் நெல் விதைக்கப்படும். இதுவும் தற்போது அரிதாகிக் கொண்டு செல்கிறது.





# தொதல்

தொதல் ஈழத்தில் பிறந்த உணவுப் பண்டங்களில் ஒன்று. முஸ்லிம்களின் விருந்துகளில் கட்டாயம் இடம்பிடிக்கும் இனிப்பு உணவு. யாழ்ப்பாணத்தவர்கள் இதனை சர்க்கரைக் களி என்றும், சிங்களவர்கள் களுதொதல் என்றும் இதனை அழைத்தார்கள்.

தொதல், ஈழத்தில் பிறந்தது என்று கூறினாலும் அது குறித்து பல சர்ச்சைகள் உள்ளன. யாழ்ப்பாணத்திலேயே இது தோற்றம் பெற்றது என்றும் இல்லை தென் மாகாணத்தவர்களே உருவாக்கினர் என்றும், மலேசியாவில் இருந்து வந்தவர்களே தொதலை இலங்கையில் அறிமுகப்படுத்தினர் என்றும் கூறப்படுகின்றது.

எது எப்படி இருப்பினும் தொதலில் தேங்காய் கட்டாயம் இடம்பெற்றிருக்கும். ஈழத் தமிழர்களின் உணவுப் பாரம்பரியத்தில் தேங்காய் முக்கியம் - அதிகளவில் இடம்பிடிப்பது என்பதால் ஈழத்திலேயே தொதல் பிறந்திருக்கலாம் எனக் கூறுகிறார்கள்.

தொதலை பச்சரிசி, தேங்காய், சீனி, பயறு, முந்திரி, ஏலக்காய் உட்பட்ட பொருட்களைப் பயன்படுத்திச் செய்வர். சிங்களவர்கள் கித்துள் கட்டியைப் பயன்படுத்துவர்.




# பஞ்சவண்ணத் தூது


யாழ்ப்பாண இராச்சியத்தில் இணுவில் பகுதியை ஆட்சி செய்த கைலாயநாதன் என்பவனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த நூலே பஞ்சவன்னத் தூது. பாட்டுடைத் தலைவனான கைலாயநாதனை இளந்தாரி என அழைப்பர். இதனால் இளந்தாரி பஞ்சவன்னத் தூது என்றும் இந்நூல் அறியப்பட்டது.

இணுவில் சின்னத்தம்பி புலவர் ஒல்லாந்தர் காலத்தில் இந்நூலை ஆக்கியிருந்தார். தூது இலக்கியங்களில் பொதுவாக ஏதாவது ஒரு பொருளை தூதாக அனுப்புவர். இந்நூலில் நாயகி தலைவனிடம் தூதனுப்ப ஐந்து பொருட்களை நாடுகிறாள். இதனாலேயே பஞ்சவன்னத்தூது எனப் பெயர் ஏற்பட்டது.

வெவ்வேறு நீளங்களால் ஆன 44 பாடல்கள் இந்நூலில் உள்ளன. முதல் 8 பாடல்கள் கடவுள் வாழ்த்தாகவும், இறுதி 11 பாடல்கள் இளந்தாரி துதியாகவும் அமைந்துள்ளன. 23 பாடல்களே தூது நூல் வகையுள் சேரும்.

இணுவிலில் உள்ள இளந்தாரி கோயிலில், சித்திரை புத்தாண்டை அடுத்து வரும் முதல் செவ்வாய்க்கிழமை பொங்கல் மடை வைத்து பஞ்சவன்னத்தூது நூல் படிக்கப்படும் நடைமுறை இன்றும் உள்ளது.






# கொக்குச் சத்தகம்

நமது அன்றாட பாவனைப்பொருட்களில் பல்வேறுப்பட்ட வெட்டும் சாதனங்களை பயன்படுத்துகிறோம். அந்த வகையில் உயரமான பகுதியில் வெட்டுவதற்கு இந்த கொக்குச் சத்தகம் பாவிக்கப்படுகிறது. இது கொக்கின் தலை போல உள்ளதால் கொக்குச் சத்தகம் என்று அழைக்கப்படுகிறது.

இதை நீண்ட ஒரு தடியின் முனையில் பொருத்துவதன் மூலம் உயரமான பகுதிகளிலுள்ள வெட்டும் அல்லது பறிக்கும் வேலைக்கு பயன்படுகிறது. தென்னையில் இருந்து தேங்காய் பறிக்க, குழை வெட்ட என பல தேவைக்கு பாவிக்கலாம். சத்தகம் இரும்பில் இருந்து தயாரிக்கப்படுகிறது. அதேவேளை பூவரசு, மூங்கில், மஞ்சவுணா தடிகள் பாவிக்கப்படுகின்றன.

# ஒரே நிலம் இரண்டு இலாபம்! இந்தோனேஷிய விவசாயம்

விவசாயத்தில் ஈடுபடும் நாடுகளுக்குத் தனித்தனியாகப் பாரம்பரிய முறை இருக்கிறது. ஒரு நாட்டிற்குள்ளேயேகூட ஒரே விவசாய முறை பின்பற்றப்படுவது இல்லை. அவற்றிற்குள்ளும் அதிக வேறுபாடுகள் இருக்கின்றன. அதிலும் இந்தோனேஷியாவின் பாரம்பரிய விவசாய முறை கொஞ்சம் சுவாரசியமானது.

இந்தோனேஷியர்கள் தங்களின் நெல் வயல்களில் மீன்களை வளர்க்கிறார்கள். ஒரு நெல் வயலுக்குக் குறைந்தபட்சம் 60 நாள்கள் வரை தண்ணீர் தேவைப்படும். அந்தத் தண்ணீரை வைத்து ஒரே நேரத்தில் நெற்பயிர்களையும், மீன்களையும் வளர்த்து தண்ணீரை மிச்சப்படுத்துகிறார்கள். இது அங்கே பாரம்பரியமாக தொன்று தொட்டு பின்பற்றப்படும் வழக்கம் இது. அங்கே நெற்பயிர்தான் பிரதான பயிர். அதனால்தான் அத்தண்ணீரைப் பயன்படுத்தி மீன்களையும் வளர்க்கிறார்கள். இதற்காக அமைக்கப்படும் வயல்களின் அமைப்பு கொஞ்சம் வித்தியாசமானது.

நெல் வயல் ஒரு பக்கம் சிறிது சரிவாக இருப்பது போல அமைக்கப்படும். இதனால் வயலின் ஏதாவது ஒரு பக்கத்தில் தண்ணீர் அதிகமாகத் தேங்கி நிற்கும். நெற்பயிர் நடவு செய்து சில நாள்களில் மீன்கள் விடப்படுகின்றன. நெற்பயிருக்கான தண்ணீரை நிறுத்தும் வரை மீன்களை அங்கேயே வளர்ப்பது வழக்கம். மீன்களைப் பிடிக்கும் தருணத்தில் வயல்களில் இருக்கும் தண்ணீரை குறைத்தால் சரிவான பக்கம் நோக்கி நீர் குறைய ஆரம்பிக்கும். சரிவான பக்கத்தின் ஓரத்தில் வலைகளை வைத்து மீன்களைப் பிடித்துக் கொள்கிறார்கள். இப்படி வளர்க்கப்படும் மீன்களுக்கு இந்தோனேஷியாவில் கொஞ்சம் டிமாண்ட் அதிகம்.



'வயலில் விடப்படும் மீன்களால் நெற்பயிரும் காப்பாற்றப்படுகிறது" என்கிறார்கள், இந்தோனேஷிய விவசாயிகள். மேலும் 'வயலில் இருக்கும் சிறிய பூச்சிகளை மீன்கள் உட்கொள்கின்றன. இதனால் பூச்சிகளின் சேதத்திலிருந்து பயிர்கள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் வயல்களில் மீன்கள் நீந்துவதால் பயிர்களுக்கு அதிகமான ஒட்சிசன் கிடைக்கிறது. மேலும் மீன்களின் கழிவுகள் பயிர்களுக்கு நல்ல உரமாகவும் மாறுகிறது. இதனால் நல்ல விளைச்சல் கிடைக்கிறது என்கிறார்கள் விவசாயிகள்.



ஏர் பின்னது உலகம்

## வறட்சிப் பாதிப்புக்கு உதவும் செயற்கைக்கோள்




பொதுவாக, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் பயிர்கள் குறித்த கணக்கெடுப்புக்குப் பல நாள்கள் ஆகின்றன. அதனால், காப்பீடு செய்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது தாமதமாகிறது. இத்தாமதத்தைத் தவிர்க்கும் வகையில், அவுஸ்ரேலியாவில் 'குறியீட்டு சார் காப்பீடு' (Index Based Insurance) எனும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மழை, புயல் காற்று, வெப்பநிலை, ஈரப்பதம் போன்ற வானிலை மாற்றங்கள், செயற்கைக்கோள் மூலம் அளவிடப்பட்டுப் பதிவு செய்யப்படுகிறது. இந்த மாற்றங்கள் சராசரிக் குறியீட்டு அளவைவிடக் கூடினாலோ, குறைந்தாலோ விவசாயிகளுக்கு எந்தக் கேள்வியுமின்றி இழப்பீட்டுத்தொகை கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இயற்கைக்கு வழி

## அமுதக் கரைசல்



நில வள ஊக்கி என்றும் இதனை அழைக்கிறார்கள். இதை நிலத்தில் தெளித்ததும் 24 மணி நேரத்தில் நுண்ணுயிர்கள் பெருகும். பயிர்கள் நோயில்லாமல் வளர உதவும். பொதுவாக 15 நாட்களுக்கு ஒருமுறை இந்தக் கரைசலை பயிர்களுக்குக் கொடுக்கலாம். வாடிய பயிர்களுக்கு வாரம் ஒருமுறைகூட கொடுக்கலாம்.

மாட்டு சாணம்
மாட்டு சிறுநீர்
சர்க்கரை - 5 கட்டிகள்
10 லீற்றர் தண்ணீர்

அமுதக் கரைசலுக்கு எடுக்கும் சாணம், சிறுநீர் என்பன ஒரு தடவையில் போட்டதாக இருக்க வேண்டும்.

சாணம், சிறுநீர், சர்க்கரை, தண்ணீர் ஆகியவற்றை பிளாஸ்ரிக் வாளியில் அல்லது மண் பானையில் போடவும். இதனை நிழல்பாங்கான இடத்தில் 24 மணி நேரத்துக்கு வைக்கவும்.

தயாரான அமுதக் கரைசலை பத்து மடங்கு நீர் சேர்த்துப் பயிர்களுக்கு, அல்லது நிலத்துக்கு தெளிக்கலாம். பயிர்களுக்கு தண்ணீருடன் சேர்த்தும் விடலாம்.

# ஆரிட்டை சொல்லி அழ?

## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## தண்ணி! ஓயில்!! தண்ணி!!!



தீவுச் சனம் வந்து எங்கடை பக்கத்திலை காணி,பூமி வேண்டேக்கை அப்பு அவையிட்டைக் கேட்டவர் "ஏன் அங்கை விட்டிட்டு வந்து இஞ்சை காணியளை வேண்டுறியள் எண்டு". அதுக்கு அவை சொன்னவை "இஞ்சத்தே கிணத்திலை உள்ள பச்சைத் தண்ணியைக் குடிச்சிட்டுப் பசியாறலாம். சாப்பிடத் தேவை இல்லை" எண்டு. அப்ப அப்பிடி முத்துப் போலை கிடந்த கிணத்துத் தண்ணியை, கொழும்புப் பக்கமிருந்து சுன்னாகத்திலை "மிஷினாலை கறன்டைக் தாறம்" எண்டு சொல்லிக் கொண்டு வந்த கவிழுவாராலை தண்ணீக்கை ஓயில் போய் இப்ப அந்தக் கிணத்துத் தண்ணியைக் குடிக்கப் பயமாக் கிடக்கு எண்டு சனம் பதறிது.

சரி தெரியாமல் செய்து போட்டினம் எண்டு வச்சுக் கொள்ளுவம். உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுப்போட்டு சனத்தை ஆசுவாசப்படுத்தக் கூடிய விசியங்களைச் செய்திருக்க வேணும். அதைச் செய்யேல்லை. அதைச் செய்யாமல் விட்டிட்டு சத்தியாக்கிரகம் இருந்த சனத்திட்டைப்போய் அவையின்ரை தலையிலை அடிச்சுச் சத்தியம் பண்ணி "உது கன நாளா இறைக்காத கிணறு. ஒருக்காக் கலக்கி இறைச்சுப்போட்டுப் பாருங்கோ. முத்துமாதிரி ஊத்திலை இருந்து தண்ணிவரும்" எண்டு கறுவல் சொல்லிப்போட்டுப் போனாப் பிறகு சனமும் இறைச்சுப்போட்டுப் பாத்தால் பிறகும் ஓயில் மணத்தோடை சேத்துத்தண்ணிமாதிரித்தான் தண்ணி வந்திது. என்ன செய்ய? அதைக் குடிக்கலாமோ? பிறகு அரைக்கட்டைக்கு அங்காலை சைக்கிளிலை போய்த்தான் இண்டுவரை தண்ணி அள்ளிக் கொண்டு வந்து குடிக்கிறம் எண்டு சுன்னாகச் சனம் சொல்லிது.

வசதி உள்ள ஆக்கள் கொழும்பிலை இருந்து வாற போத்தில் தண்ணியைத்தான் வாங்கிக் குடிக்கினம். சவுதியிலை இருந்து கப்பலிலை கொண்டு வாற ஒரு லீற்றர் பெற்றோலுக்கு லீற்றர் ஒண்டுக்கு 125ரூபா குடுத்து வாங்கிறம். ஆனால் உங்கை கொழும்பிலை இருந்து வாற போத்தில் தண்ணிக்கு விலை ஒரு லீற்றருக்கு எழுபது ரூபா குடுக்கிறம். என்ன கேக்க நம்பேலாமைக் கிடக்கோ? உது மட்டுமே? இப்ப ஒவ்வொரு மாதமும் வட மாகாணத்திலை மட்டும் போத்தில் தண்ணி பத்துக் கோடி ரூபாக்கு விக்குதாம். எந்தப் பெட்டிக் கடையிலை தண்ணிப் போத்தில் விக்கேல்லை எண்டதைச் சொல்லுங்கோ பாப்பம்? அவ்வளவும் அங்காலை இருந்து வாற சாமான்கள்தானே? தண்ணியைக் கொண்டு வந்து விக்கிறதுமில்லாமல் சனம் குடிச்சுப்போட்டு எறியிற வெறும் போத்தல் எல்லாம் கழிவாத்தானே போகுது. அவ்வளவும் எங்கடை நிலத்தைப் பழுதாக்குமெல்லே? அப்ப உதைத்தான் சொல்லுறது "தடியைக் குடுத்து அடியை வேண்டுறது" எண்டு.

நீங்கள் நினைச்சால் உதைக் குறைச்சுக் குறைச்சுக் கொண்டுபோய் நாளடைவிலை மற்றாக்களையும் தண்ணிப் போத்திலை வேண்டாமல் பண்ணலாம்.

சத்தியமா நாங்கள் போத்தில் தண்ணி வேண்டுறேல்லை. எங்கடை கிணத்துத் தண்ணியை அள்ளிச் சுடவைச்சுப் பானையிலை விட்டு ஆறவைச்சுக் குடிக்கிறம். எங்கடை தண்ணியிலை ஓயில் இருக்கமெண்டு பயப்பிடுறம். ஆனால் போத்திலிலை வாற தண்ணியிலை கெமிக்கல் இல்லையே? அதுகும் செயற்கையான பில்ரறிலை வடிகட்டித்தானே அடைச்சு வருகிது. அப்ப நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போன மாதிரி இல்லாமல், என்ன செய்யிறது எங்கடை தலைவிதி இதுதான் எண்டு நினைச்சுக் கொண்டு இருக்கிறதை திண்டு குடிப்பம். என்ன?

நிலத்தாலை கரைச்சல் பண்ணிறாங்கள். போக்குவரத்தாலை எவ்வளவு எங்களைக் கேவலப்படுத்தேலுமோ? அவ்வளவுக்கு எங்களைக் கேவலப்படுத்திறாங்கள். வேலை எண்டு போனாலும் வாய்ப்புக் குறைவாக் கிடக்கு.

காலமை ஒருத்தரைக் கண்டனான். அவர் சொன்னார் போன கிழமை தான் திருக்கணாமலைக்குப்போய் வந்தவராம். முன்னம் போயேக்கை புல்மோட்டை றோட்டுக்கரை காடுவத்தி மரங்கள்தான் நிண்டதாம். இப்ப பாத்தால் அந்த றோட்டிலை முழத்துக்கு முழம் விகாரையளையும், மடங்களையும் கட்டி வைச்சுக் கொண்டு இருக்கினமாம். அப்ப இந்தக் கெடுபிடியளை எல்லாம் நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோளரங்கன்

# ஒக்ரோபர் புரட்சியும் கருத்துக் களமும்

தொகுப்பு:
**செல்வநாயகம் ரவிசாந்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

**மத்தியில் தமிழர்களின் உரித்து நிலைக்க வேண்டும்**
**சி. தவராஜா**



எங்களுக்கும் மத்தி ஆட்சியில் பங்கிருக்கின்றது - உரித்திருக்கின்றது என்பதைத் தொடர்ச்சியாக நிலைநாட்டி வந்திருந்தோமானால் எமக்கான பல உரிமைகளை இலகுவாகப் பெற்றிருக்கலாம். புதிய அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதாயின் நாம் அரசினுடையதொரு அங்கமாகவிருக்க வேண்டும். 29 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நாங்கள் கடந்த- 1956 ஆம் ஆண்டிலிருந்து பிராந்திய சுயாட்சியுடன் மட்டுமே நிற்கிறோமே தவிர ஏனைய வழிமுறைகள் தொடர்பில் நாம் சிந்திக்கவில்லை. ஆனால், இந்த நாடு எங்களுடையது. மத்தியில் எங்களுக்கும் பங்கு வேண்டும் என்பதை நாங்கள் கேட்டு நிற்கவில்லை. இந்த நாட்டில் வெள்ளைக்காரர்கள் விட்டிட்டுப் போன நன்மைகளால் பயனடைந்து முன்னிலையிலிருந்தோம். ஆனால், தற்போது நாங்கள் மீண்டும் பின்னிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கு என்ன காரணம்? என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

**சிங்கள ஆட்சியாளர்களை நம்புவதில் பயனில்லை!**
**எம்.கே. சிவாஜிலிங்கம்**

கடந்த-2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது நான் என்னுடைய வாக்கை மைத்திரிபால சிறிசேனவுக்கு அளிக்கவில்லை. ஏனெனில், இவர் ஏமாற்றுவார் என்பது



எனக்குத் தெரியும். தமிழ்மக்களை ஏமாற்றிய கடைசித் தலைவராக மைத்திரிபால சிறிசேனவே இருக்க வேண்டும். ஆகவே, இனியும் நாங்கள் சிங்கள ஆட்சியாளர்களை நம்பிப் பயனில்லை. இலங்கையில் இன வெறி முத்திப்போயிற்று.

கச போக்கிலிகளுடன் கனவான் ஒப்பந்தம் மேற்கொள்ள முடியாது. ஜே.வி.பி உட்பட தென்னிலங்கையிலுள்ள சிங்களக் கட்சிகள் அனைத்துமே கச போக்கிலிகள். இனவாதிகள். எங்களுக்கு பிராந்திய சுயாட்சி கிடைக்கக் கூடாதென்பதில் இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றார்கள்.

இத்தாலியில் பத்தாயிரம் பேருக்கு அரச கரும மொழி வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் ஒரு மொழி வழி மாநிலத்தைத் தான் கேட்கின்றோம். அதனைக் கூடத் தருவதற்குத் தயாரில்லாத நிலையில்தான் சிங்கள ஆட்சியாளர்கள் காணப்படுகின்றார்கள். ஒக்ரோபர்-24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரன் புதிய கட்சி தொடர்பாக அறிவித்தார். அப்போது கொழும்பில் ரெலோவின் அரசியல் குழு கூடியது. அந்தக் கூட்டத்தில் அரசியலமைப்பு எப்போது வரப் போகின்றதோ? அப்போது பெரிய விளையாட்டெல்லாம் நடைபெறும் என கருத்துத் தெரிவித்திருந்தேன். நான் 26 ஆம் திகதி தான் பெரும் அரசியல் குழப்பம் நடைபெறுமென நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மிளகாய்ப் பொடி வீச்சுத் தொடர்பில் பலரும் விவாதிக்கிறார்கள். ஆனால், மோசமாக எங்களுடைய மக்கள் கொல்லப்பட்ட போது நாங்கள் உரிமைகளுக்காகப் பேச ஆரம்பித்த போது எங்களுடைய குரல் திருகி அடக்கப்பட்டது.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

63

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

அங்கு நின்ற ஒரு முதிய குருவானவர், "பிள்ளையளே கவலைப்படாதேயுங்கோ... கெதியிலை ஒரு சுதந்திர தேசத்தில் நீங்கள் மாதாவை தரிசிக்கலாம்" என்று சாந்தமுடன் கூறினார்.

அந்த வார்த்தைகள் சில பெண்களை விம்மியழ வைத்து விட்டன.

அதிகாலை ஐந்து மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை எந்தவித தாக்குதல்களையும் நடத்த வேண்டாம் என சிவத்துக்கு கட்டளைப் பீடத்திலிருந்து உத்தரவு வந்திருந்தது. காலை ஆறு மணியளவில் குருவானவர்கள் மூன்று வாகனங்களுடன் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியிலிருந்து வந்தபோதுதான், மாதாவைத் திரும்பவும் மடுவுக்குக் கொண்டுவரப் போகின்றனர் என்பது தெரியவந்தது.

வழமையாகப் பதினொரு மணிக்கே கால்நடையில் கொண்டு வரப்படும் காலைச் சாப்பாடு அன்று எட்டு மணிக்கே வந்துவிட்டது. போராளிகளும் எவ்வித அச்சமுமின்றி அன்று நிம்மதியாகச் சிரித்துப் பேசிச் சாப்பிட்டனர். மதியம் வலைப்பாடு, மூன்றாம்பிட்டி மீனவர்களின் ஏற்பாட்டில் எல்லா அணிகளுக்கும் கூழ் அனுப்பப்பட்டது. மதியம் இரண்டு மணியளவில் மாதா சொரூபம் பள்ளிமுனை எல்லைக்கு வந்து சேர்ந்தது. போராளிகள் சுற்றி நின்று வழியனுப்பி வைத்தனர்.

இவ்வாறு மாதாவின் பயணம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது இராணுவத்தினர் அந்தப் போரில்லாத மணித்தியாலங்களை தமக்கும் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். பெரியவலையன் கட்டிலிருந்து புறப்பட்ட ஒரு பெரும் இராணுவ அணி பறங்கியாற்றின் கிழக்குப் பக்கமாக ஆற்றுக்குச் சமாந்தரமாக காட்டுப் பகுதியினூடாக முன்னேறியது. பெரிய மடுவுக்கு வடகிழக்குத் திசையில் காட்டுக்குள் ஆற்றின் மறுகரையில் நிலை எடுத்துக்கொண்டது அந்தப் படையணி. அறுபது மி.மீ. எறிகணைகளும், தொலைதூரம் சுடும் துப்பாக்கிகளும் மட்டுமே அவர்கள் கொண்டுவந்திருந்தனர். அது போராளிகள் எதிர்பாராத ஒரு களமுனையாகும்.

போராளிகள் பெரியமடுவின் தென் பகுதியிலும், பாலியாற்றுப் பக்கமாக கிழக்குப் பகுதியிலுமே காவல் நிலைமைகளைப் பலப்படுத்தியிருந்தனர். வடக்கிலோ, வடகிழக்கிலோ படையினர் வருவதற்கான சாத்தியம் இல்லையென்றே அவர்கள் நம்பியிருந்தனர். சரியாக ஐந்து மணிக்குப் போராளிகள் முற்றுமுழுதான தயார் நிலைக்கு வந்துவிட்டனர். எனினும் தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை. ஆனால் பாலியாற்றின் மறுகரையில் நிலையெடுத்திருந்த படையினர் இரவோடிரவாக ஆற்றைத் தாண்டி எதிர்க்கரையில்



பற்றைகள், மரங்கள் மத்தியில் பதுங்கிக்கொண்டனர். சுகுணனின் அணியினர் சற்றும் எதிர்பாராத முனையாகவே அது அமைந்திருந்தது. இவ்வளவு தூரம் சுற்றி அவர்கள் நகர்வார்கள் என எப்படித்தான் எதிர்பார்க்கமுடியும்?

அதிகாலை கிழக்கு வெளுத்துக்கொண்டிருந்தபோது தட்சிணாமருதமடுப் பக்கமாக எறிகணைகளுடன் படையினரின் முன்னேற்ற முயற்சி ஆரம்பமாகியது. அதேவேளையில் கிழக்குப் பக்கமாகவும், வடகிழக்குப் பக்கமாகவும் தாக்குதல்கள் ஆரம்பமாகிவிட்டன. தாங்கள் மூன்று பக்கங்களினால் சுற்றிவளைக்கப்பட்டதையும் சுகுணன் புரிந்துகொண்டான். உடனடியாகவே அணியை மூன்றாகப் பிரித்து மூன்று திசைகளிலும் பதில் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். எனினும் பாலியாற்றைக் கடந்து வந்த இராணுவம் கணிசமான தூரம் முன்னேறிவிட்டது.

போராளிகளும் சளைத்து விடவில்லை. சுகுணன் கட்டளைப் பீடத்திற்கு நிலைமையை அறிவித்துவிட்டு எதிர்த்தாக்குதலை நெறிப்படுத்தினான். சமகாலத்தில் சன்னார், ஆட்காட்டிவெளி, பள்ளமடு என பல பக்கங்களாலும் படையினர் தாக்குதல்களை ஆரம்பித்துவிட்டனர். அன்று காலை எல்லா முனைகளிலும் சண்டை உக்கிரமாக நடைபெற்றது. வடகிழக்குப் பக்கமாக வந்த இராணுவ அணியினரில் ஒரு பகுதி பள்ளமடு நோக்கி நகர இன்னுமொரு பகுதி மேற்குநோக்கி நகர்ந்து சன்னாருக்கும் பள்ளமடுவுக்குமுள்ள போராளிகளின் தொடர்பை உடைக்க முயன்றது. மங்களாவின் அணி அதைத் தடுக்க கடுமையாகப் போரிட்டது.

அவர்களும் முன்னுக்கும் பின்னுக்குமாக இரு முனைகளில் போராட வேண்டியிருந்தது. போராளிகளின் கடலணி தமது தளத்தை மூன்றாம்பிட்டிக்கு பின்னகர்த்தி விட்டதால் சிவத்தின் அணியம் விடத்தல்தீவையும் பள்ளமடுவையும் ஒரே நேரத்தில் பாதுகாக்க வேண்டியிருந்தது. எனினும் கடற்புலிகள் கடலில் நின்று பீரங்கிப் படகுகள் மூலம் சிவத்துக்கு உதவி வழங்கிக்கொண்டிருந்தனர்.

மங்களாவின் அணி இப்போ இரண்டு பக்கங்களில் போராட வேண்டியிருந்தது. ஒருபுறம் ஆட்காட்டிவெளி, பரப்புக்கடந்தானால் முன்னேற முயலும் படையினரையும் பின்புறமாக பெரியமடு, பள்ளமடுவீதியை நெருங்கும் படையினரையும் தடுத்து நிறுத்தப் போராடவேண்டியிருந்தது.

மங்களாவின் அணி பின்வாங்கினால் தாங்கள் நாலு புறமும் சுற்றிவளைக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்படும் அபாயம் இருப்பதால் தெற்கில் பாதுகாப்புத் தாக்குதலை நடத்திக்கொண்டு வடக்கில் ஓர் அதிரடித் தாக்குதலுக்கு தனது அணியைத் தயார்ப்படுத்தினான் சுகுணன்.

அந்த நேரத்தில் சுகுணனுக்கு உடனடியாக சன்னாரை நோக்கிப் பின்வாங்கி மங்களாவின் அணியுடன் இணையும்படி உத்தரவு வந்தது. மங்களாவுக்கும் சுற்றிவளைப்பை உடைத்து அரசியல்துறைப் படையணி பின்வாங்கப் பாதை ஏற்படுத்திக் கொடுக்கும்படி கட்டளை வந்தது. ஒரு பெரும் சுற்றிவளைப்பை மேற்கொண்டு போராளிகளின் ஒரு அணியையே முற்றாக அழித்துவிடும் நோக்கில் போரிட்டுக்கொண்டிருந்த இராணுவம் முன்னும், பின்னும் ஒரே நேரத்தில் அதிரடித் தாக்குதல் நடத்தவே திணறிப்போய்விட்டது. மகளிர் அணியும் அரசியல்துறைப் படையணியும் இழப்புகளைப் பொருட்படுத்தாமல் கர்ணகடூரமாகப் போரிட்டனர். வீரச்சாவுகள் அதிகரித்தபோதும் போராளிகளின் தாக்குதல் மேலும் மேலும் உக்கிரமடையத் தொடங்கியது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# மனதுக்கு நெருக்கமாகும் கதைகள்

**உடுவில் அரவிந்தன்**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

'ஒரு தோட்டத்தின் கதை' வில்லிசை உத்தியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு வில்லிசைக் கலைஞராகக் கதாசிரியர் சொல்கின்ற கதை உயிரோட்டத்துடன் விளங்குகின்றது. தோட்டத்திலுள்ள தேசிக்காய்களைப் பாதுகாக்கும் முதியவரின் கவனமும் திருட்டைக் கண்டுபிடித்தவுடன் வெளிப்படுகின்ற இரக்கமும் அனுபவ மனதின் பக்குவத்தைக் காட்டுகின்றன.

இத்தொகுப்பின் நிறைவுக்கதையான 'சொற்களுக்குப் பெறுமதியில்லை' தத்துவார்த்த விசாரணைகளை நேர்த்தியாக விபரிக்கின்றது. சமூகத்திலுள்ள போலித்தனங்களைக் கண்டு சஞ்சலமுறும் மனம் கனவுவழியாக தெய்வதரிசனம் காணுகின்றது. சிறுகதையின் இறுதிப்பகுதி நுணுக்கமான அகவுணர்வுடன் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலுள்ள சிறுகதைகளில் நூலாசிரியரின் தனித்துவ முத்திரைகளாக என்ரை, மழை தூறிய ஒரு மாலைப்பொழுது, ஒரு கதை ஒரு கவிதை ஒரு கவிதைக் கதை, வாழ்க்கை என்பது, ஒரு தோட்டத்தின் கதை என்பவற்றைச் சொல்லலாமெனக் கருதுகின்றேன். அவருடைய சிறுகதைகளில் தலைகாட்டுகின்ற கவித்துவமான உவமைகள் மனதையள்ளுகின்றன. 'ஆங்காங்கே பாலைவனப் பசுந்தரையாய்த் தோட்டவெளிக் கிணற்றுச்சோலைகள்', 'ஒரே மட்டத்தில் குளமாய்ப் பரந்திருக்கும் புகையிலைச்செடிகள்',



படம் : யாத்ரீகன்

'பச்சைப்பாய் விரித்திருக்கும் வெங்காயப்பயிர்கள்' போன்றவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

குப்பிழான் ஐ.சண்முகனிடமும் அவருடைய சமகாலப் படைப்பாளிகள் சிலரிடமும் பொதுவான அலைவரிசையொன்றைக் காணமுடியும். அவர்களின் கருத்துநிலைகளில் மாறுபாடுகள் இருந்தாலும் சிறுகதைகளின் களச்சித்திரிப்பு, எடுத்துரைப்பு முறைமை என்பன ஏறக்குறைய ஒரே பண்பிலமைந்திருப்பதை அவதானிக்கலாம். அவரிடம் அந்தப் பண்பின் தொடர்ச்சி இன்னும் உயிர்ப்புடனிருப்பது சிறப்பானது.

பொதுவாகச் சிறுகதைகளில் செய்யப்படுகின்ற வடிவ மாற்றங்கள், மாறுபட்ட உத்திகள், பரிசோதனை முயற்சிகள் என்பன வித்தியாசமான வாசிப்பனுபவங்களைத் தரக்கூடியன. நின்று நிதானித்துப் பயணிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்துபவை. அவை வாசகனின் கொள்ளுந்திறனைச் சார்ந்தவை. அதேவேளை, குப்பிழான் ஐ.சண்முகனின் பெரும்பாலான சிறுகதைகள் மனதுக்கு நெருக்கமாகி அற்புதமான உணர்வுத்தொற்றலை ஏற்படுத்தக்கூடியவை. இயல்பான நடை, சிறப்பான மொழிப் பிரயோகம் என்பவற்றால் முழுமைபெறுபவை. அவர் தனக்கு வாலாயமான பாணியிலேயே தொடர்ந்தும் எழுதுவது உயிரோட்டமான படைப்பிலக்கியத்துக்குத் துணையாகும் என்பது ஒரு வாசகனாக என்னுடைய கருத்தாகும்.

இந்நூல் ஒளிப்பான அட்டைப்படத்துடன் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எவ்வளவுதான் முயன்றாலும் படைப்புகளை அச்சேற்றும்போது எழுத்துகள் மாறியமைவதை எம்மால் தவிர்க்கமுடிவதில்லை. அந்தச் சவாலையும் இலகுவாகக் கடந்து பயணிப்பது மிக அவசியமானது. இத்தொகுதியிலுள்ள சிறப்பான சிறுகதைகள் அண்மைக்காலத்திலேயே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குப்பிழான் ஐ.சண்முகன் தெளிந்த நீரோடை போன்று படைப்பு மனதைத் தக்கவைத்துக் கொள்வதற்கு உகந்த இல்லச்சூழல் வரமாக வாய்த்திருக்கிறது. அவர் இன்னும் எழுதவேண்டும். அவருடைய இலக்கியத்தோட்டம் அதற்காகவே காத்துக்கொண்டிருக்கிறது.

(முற்றும்)



## சிறுமியின் சித்திரங்கள்

மீதமிருக்கும் காலங்களை
சமாளித்து நகர்த்திச் செல்லவென
தூர்ந்து கிடந்த வாழ்வையள்ளி
புயங்களில் சுமந்தவாறு வீடு மாறிச் செல்கிறேன்

மனம் தாங்காது சலிப்புற்று
வாடகை வீடு மாறிச் செல்லும்
ஒவ்வொரு தருணமும்
சொந்த வீடு பற்றியதான கனவை
ஒருபோதும் வரையத் தவறுவதில்லை

அறைச் சுவரில் வரைந்திருக்கும்
தனது பொம்மைகளையும்
செல்லப் பிராணிகளையும் பிரிய மனமின்றி
சிணுங்கியபடி வருகிறாள் சிறுமி

வாழ்தலின் தொடர்ச்சியான போராட்டமும்
இடையறா அந்தரிப்புகளும்
என் நிம்மதியைச் சிதைக்கின்றது

இருந்தும் சிறுமியின் மனசினில்
அப்படியே சிதையாமலிருக்கிறது
வரைந்து பழகிக் களித்த சித்திரங்களின்
கோடுகளும் தூக்கலான வர்ணங்களும்

- ஜமீல்

## ஓவிய இணையத்தளம்

**சடகோபன்**

ஓவியக்கலை என்பது கூட்டமைத்தல், வண்ணங்களைப் பயன்படுத்தி வரைபவரின் எண்ண ஓட்டத்தையும் நோக்கங்களையும் வெளிக்கொணரும் ஒரு கலை ஆகும். அந்தவகையில் ஓவியங்களை ஆவணப்படுத்துவதற்கும் ஓவியக்கலை குறித்த பல்வேறு தகவல்களை ஓவியக் கலைக்களஞ்சியமாகப் பாதுகாப்பதற்கும் ஓர் இணையத்தளம் செயற்பட்டுக் கொண்டிருப்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

இந்த இணையத்தளத்தில் ஓவியர்களைப் பெயர் வழியில் தேடல் (Artists by Name), ஓவிய வேலைகளைத் தலைப்பு வழியில் தேடல்(Artworks by Title), ஓவிய அருங்காட்சியகங்கள் (Art Museums) என்று 3 முதன்மைத் தலைப்புகள் வழியாகத் தேடுவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுதவிர ஆங்கில எழுத்துக்களின் அகரவரிசையில் ஓவியர்கள் , இயக்கம், ஊடகம், பொருள், தேசியம், பெண்ஓவியர்கள் எனும் தலைப்புகளிலான வழிமுறைகளில் எளிமையாகத் தேடிக் கண்டறிவதற்கான வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் குறிப்பிட்ட ஓவியர்கள் பற்றிய செய்தியுடன் அவர்களின் சில ஓவியங்களையும் பார்வையிட்டுத் தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும் அவர்களைப் பற்றிய முழுமையான செய்திகளை அறிந்து கொள்வதற்காக அவர்களைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருக்கும் பிற தளங்களுக்கான இணைப்பு வசதியும் அளிக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர **கட்டுரைகள், ஓவியச் செய்திகள், உலகளாவிய ஓவிய அருங்காட்சியகங்கள், இணைப்புகள்,**




**உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.**



சொல்லடைவுகள் எனும் முதன்மைத் தலைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

கட்டுரைகள் எனும் தலைப்பில் சொடுக்கினால் ஓவியம் தொடர்புடைய ஒன்பதினாயிரத்திற்கும் அதிகமான கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றன. ஓவியச் செய்திகள் எனும் தலைப்பில் சொடுக்கினால் ஓவியம், ஓவியப் போட்டிகள் போன்ற ஓவியத் தொடர்புடைய செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஓவிய அருங்காட்சியகங்கள் எனும் தலைப்பில் சொடுக்கினால் உலக வரைபடம் ஒன்று பார்வைக்குக் கிடைக்கின்றது. கனடா, அமெரிக்கா, மத்திய மற்றும் தென்னமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பா, மத்திய மற்றும்

(22ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. மீது சட்ட நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை?

**பின்பற்றக்கூடாத முன்னுதாரணம்**

## பயத்தினாலா அல்லது பலத்தினலா?


மக்கள் சொத்துக்களைச் சூறையாடிக் கொண்டு வெள்ளையும் சொள்ளையுமாகத் திரிவதில் அர்த்தமில்லை. அரச நிறுவனங்களில் சேவைகளைப்பெற்றுக் கொண்டு அதற்குச் சேரவேண்டிய கட்டணத்தைச் செலுத்தாமல் இருப்பதுவும், ஏய்ப்பதுவும் முறையாகாது. இப்படியே ஒவ்வொருவரும் செய்யத் தொடங்கினால் அத்தகைய நிறுவனங்களை இழுத்து மூடுவதைத் தடுக்க முடியாது. - என்கிறார் ஒரு பொதுமகன்

இப்படியானவர்கள் விடயத்தில் அரசும் பாரபட்சமாக இருக்கிறது. இதே மேற்கத்தைய தேசமானால் என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கும். என்ன ஊழல் இருந்தாலும் இப்படியானவற்றிற்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஒரு பொது நலன் சார்ந்த வழக்கினைக் கூட யாராவது போடக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகிறது.

பொதுவாக இவ்வித செயற்பாடுகளைச் செய்வதில் அதிகமாக ஈடுபடுபவர்கள் அரசியல்வாதிகளும் அரசியல் செல்வாக்கும் உள்ள குடிமகன்களே. அவர்களுடன் அதிக பணப்புழக்கம் உள்ள கறுப்புப் பண முதலாளிகளும், பாதாளகோஷ்டிகளும். இலஞ்சத்தை ஊக்குவிக்கின்றவர்களும் அடங்குவர்.

மக்களின் பணத்தைச் சூறையாடுபபவர்களையும், அதைத் தமது சுக போகத்துக்கு அனுபவிப்பவர்களையும் ஒரு போதும் மன்னிக்கக் கூடாது. அத்தகைய மனிதர்களை நீதி மன்றங்களில் ஏற்றி அதற்குரிய தண்டனையை வழங்க வேண்டும் என்பது எமது கருத்து

இத்தகைய போக்கினைக் கொண்டவர்களாக ராஜபக்ச குடும்பமும் அவர்கள் சார்ந்த அரசியல் பிரமுகர்களும் காணப்பட்டனர். அவர்கள் நண்பராக இருப்பதனாலோ என்னவோ நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவும் அவ்வாறான



பழக்கமுடையவரென சமூகவலைத் தளங்களில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

ஈபிடிபி கட்சியின் யாழ்ப்பாண அலுவலகமாக இயங்கிய ஸ்ரீதர் தியேட்டரினதும், அவர் கட்சி ஊடகங்கள் இயங்கிய கட்டடங்களினதும் மின்சாரக் கட்டணங்கள் பல காலமாகச் செலுத்தப்படவில்லை என்ற தகவலை இலங்கை மின்சார சபை வெளியிட்டிருக்கிறது. 1998 இலிருந்து ஸ்ரீதர் தியேட்டருக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அன்று தொடக்கம் 2015 ஆட்சி மாற்றம் ஏற்படும்வரை இந்தக் கட்சியானது மின்கட்டணத்தைச் செலுத்தாது வந்திருக்கிறது. அந்தச் செலுத்தாத தொகையாக 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75சதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் 2015 தொடக்கம் இன்று வரை மின் கட்டணம் ஒழுங்காகச் செலுத்தப்பட்டு வருவதாக அவ்விணையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் இயங்கிய அவர்கள் அலுவலகத்துக்கான மின்கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக இருக்கின்ற இந்த நிலுவையை அறவிடவில்லை எனத் தெரிவித்த மின்சாரசபை அது தொடர்பான மேலதிக தகவலை வெளியிட மறுத்துள்ளனர் என அச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது.

சில நாட்களுக்கு முன்னர் நடந்த சம்பவத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஒரு வயோதிபத் தம்பியினர் தனியாக வசித்து வருகின்ற ஒரு வீட்டின் மின்சாரக் கட்டணம் மூன்ற மாத காலமாகச் செலுத்தப்படாது இருந்திருக்கிறது. காரணம் அவர்களுக்கு வரும் பணம் தாமதமாக வந்ததும் அதனைச் சென்று செலுத்த ஆளில்லாமையுமே என்று அறியப்பட்டது. திடீரென அவர்கள் வீட்டிற்கு வந்த மின்சாரசபை ஊழியர்கள் மின்துண்டிப்பைச் செய்ய முற்பட்டபோது எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்காது மின்துண்டிப்பைச் செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். பின்பு அவர்கள் தூரத்து உறவினர் ஒருவரின் உதவியுடன் நிலைமையைச் சமாளித்துள்ளனர். அப்படி ஒரு சிறு தொகைக்கே காறாரான போக்கைக் கடைப்பிடிக்கின்ற அதிகாரிகளும் ஊழியர்களும் இப்படியான தொகையைச் செலுத்த வேண்டிய ஒரு அரசியல் கட்சிக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கைகள் எடுக்கவில்லை? இவ்வளவு பாரிய தொயைச் செலுத்த வேண்டிய ஒரு நுகர்வாளருக்குத் எதுவித நடவடிக்கையும் எடுக்காது, மின்துண்டிப்பை மேற்கொள்ளாது தொடர்ந்தும் அவர்களுக்கு மின்சாரத்தை வழங்குவது ஏன் என்று தெரியவில்லை, அந்தக் கட்சி கொண்ட அரசியல் பலத்தினாலா? அல்லது அதன் செயலாளர் நாயகம் மிகுந்த அரிசியல் செல்வாக்குள்ளவராக இருப்பதனால்தானா?

ஏறத்தாழ 86 இலட்சம் முடக்கப்பட்டி ருக்கிறது. இது மின்சார சபைக்குச் சொந்தமான பணம் என்றாலும் முடிவாக அது மக்களது வரிப்பணம் என்றதை மறப்பதற்கில்லை. ஈபிடிபியினரைப் போல இவ்வித சமூகப் பொறுப்பற்ற போக்கைக் கடைப்பிடிக்கின்றதொரு கட்சி மக்களுக்குத் தேவையா? என்ற கேள்வியும் எழாமலில்லை. மின்சார சபையின் இந்தத் தொகையானது ஈபிடிபி அங்கத்தவர்களது பணம் மட்டுமல்ல இலங்கை வாழ் மக்கள் வேர்வை சிந்தி உழைத்த இரத்தம் எனலாம்.

மக்களுக்குப் பணியாற்ற வென்று புறப்பட்ட இவர்கள் போன்றவர்கள் மக்கள் பிரதிநிதி என்றோ! அல்லது மக்கள் சேவகர்கள் என்றோ! கருத முடியமா?

இது போன்று நீண்டகாலமாகச் செலுத்தப்படாத நிலுவைகளுக்கு மின்சாரசபை வழமையாக என்ன நடவடிக்கை எடுக்குமோ? அதை அவர்கள் செய்யத் தயங்குவதேனோ? அரசியல் பலத்திலானா? அல்லது பயத்தினாலா? அவர்கள் மக்களுக்குத் தெரிவுபடுத்த வேண்டும்.

இது போன்ற சமூகப் பொறுப்பற்றவர்களை தண்டிக்காது விடுவதனால் அவர்களைப் பார்த்துப் பலர் இதையே தொடர வாய்ப்பு உண்டு. அரசியல் செல்வாக்கு இருந்தால் எதனையும் செய்துவிடலாமென்ற போக்கும் எண்ணமும் இது எனலாம். மின்சார சபையைப்போன்று ஏனைய அரச நிறுவனங்களையும் சமூக நிறுவனங்களையும் ஏய்க்க வாய்ப்புண்டு.

எனவே இவர்களை மக்கள் முன்னுதாரணமாக்கக் கூடாது.

---

### ஓவிய...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு நாடுகள், ஆசியா, ஆபிரிக்கா என்று ஏழு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மண்டலங்களின் பெயர்களில் சொடுக்கினால் அந்த மண்டலப்பகுதியில் இருக்கும், நாடுகள், மாநிலங்கள், நகரங்கள் வாரியாக அருங்காட்சியகங்கள் குறித்த பட்டியல் ஆங்கில எழுத்துக்களின் அகரவரிசைப்படி இடம்பெற்றிருக்கிறது.

இணைப்புகள் எனும் இடத்தில் சொடுக்கினால் பொது நுண்கலை இணைப்புகள் எனும் தலைப்பின கீழ் ஓவியம் தொடர்புடைய தகவல்களைக் கொண்டிருக்கும் பல்வேறு இணையத்தளங்களின் பெயர்கள் மற்றும் அத்தளம் குறித்த குறிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. சொல்லடைவுகள் எனும் தலைப்பில் சொடுக்கினால் அங்கு நுண்கலைக் குறிச்சொற்கள் கிரேக்க மற்றும் ரோமானிய தொன்மவியல், கிறிஸ்தவப் புனிதர்கள் எனும் தலைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

ஓவியம் தொடர்புடைய பல்வேறு தகவல்களைக் கொண்டிருக்கும் இந்த ஓவியக் கலைக்களஞ்சியத்தினைப் பார்வையிட விரும்புபவர்கள் http: www. artcyclopedia.com எனும் இணைய முகவரிக்குப் பயணிக்கலாம்.



சுந்தர்.சி இயக்கும் புதிய படத்தில் விஷாலுக்கு ஜோடியாக தமன்னா நடிக்க இருக்கிறார். 'அயோக்யா' படத்தின் படப்பிடிப்பு முடிந்தவுடன் இந்தப் படத்துக்கான பணிகள் தொடங்கவுள்ளன.

'நாடோடிகள் 2' படம் வெளியீட்டுக்குத் தயாராகிறது. 'கொம்பு வச்ச சிங்கம்டா', 'கென்னடி கிளப்' படங்களில் நடிக்கிறார் சசிகுமார்.


இந்நிலையில் சசிகுமாரின் புதிய படம் ஒன்றில் நிக்கி கல்ராணி நாயகியாக நடிக்கவுள்ளார். இதில் முக்கிய வேடத்தில் சதீஸ் நடிக்கிறார்.

இன்னமும் பெயரிடப்படாத இந்தப் படத்தை சுந்தர்.சியின் உதவியாளர் கதிர் இயக்குகிறார்.



விஜய் சேதுபதி 'மாமனிதன்' படத்தில் நடித்து முடித்து விட்டார். தற்போது 'லாபம்' என்ற படத்திலும், பெயரிடப்படாத இன்னொரு படத்திலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில் '96' படத்தை விநியோகித்த 7 ஸ்கிரீன் ஸ்டூடியோவின் தயாரிப்பில் ஒரு படத்தில் நடிக்கிறார். இதற்கு துக்ளக் எனப் பெயரிடப்பட்டுள்ளது.






காதலர் தினத்துக்கு வெளியாகிறது கார்த்தியின் 'தேவ்' படம். காதலை மையப்படுத்திய இந்தப் படத்தில் வில்லன் இல்லையாம். சண்டைக்காட்சிகள்கூட வன்முறை - இரத்தம் தெறிக்காத அளவு படமாக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார் கார்த்தி.



ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கவுள்ளார் சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த். படப்பிடிப்பு மார்ச் மாதம் ஆரம்பமாகிறது.

இந்நிலையில், ரஜினி ரசிகர் ஒருவர் அந்தப் படத்திற்காக போஸ்ரர் ஒன்றை உருவாக்கியுள்ளார். ரஜினி ஸ்ரைலில் உருவாக்கப்பட்ட போஸ்ரருக்கு இணையத்தில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.




தெலுங்கு நடிகர் மகேஷ்பாபுவின் 25ஆவது படமான 'மஹரிஷி' படத்தில் பூஜா ஹெக்டே நாயகியாக நடிக்கிறார்.

இந்தப் படம், மே மாதம் வெளிவர இருக்கிறது. இது மகேஷ்பாபுவின் 25-வது படம் என்பதால் பிரமாண்டமாக வெளியிடத் திட்டமிடப் பட்டுள்ளது.



விஜய் - அட்லி இணைந்துள்ள படம் மிக வேகமாக உருவாகி வருகிறது. ஜூலை மாதம் படப்பிடிப்பை முடித்துவிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

நயன்தாரா, பரியேறும்பெருமாள் கதிர், விவேக், யோகிபாபு ஆகியோர் இணைந்துள்ள இன்னமும் பெயரிடப்படாத இந்தப் படம் தீபாவளிக்கு வெளியாகவுள்ளது.




# பதவி விலகல்

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான கிறேக் செப்பல் தேர்வுக்குழு உறுப்பினர் பதவியில் இருந்து விலகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது 70 வயதான கிறேக் செப்பல் இவ்வருடம் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடர் முடிவடைந்த பின்னர் அப்பதவியில் இருந்து விலகுவது குறித்து கிரிக்கெட் அவுஸ்ரேலியாவுடன் கடந்தவாரம் கலந்துரையாடியதாகக் கூறப்படுகின்றது.


அவுஸ்ரேலிய அணிக்காக 87 டெஸ்ட் போட்டிகளிலும் 24 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் விளையாடிய செப்பல் முதற் டெஸ்ட் போட்டியிலும் இறுதி டெஸ்ட் போட்டியிலும் சதம் அடித்தவர். 1984 ஆம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் 1984 - 1988, 2010 - 2011, ஆகிய காலப்பகுதிகளில் அவுஸ்ரேலிய அணியின் தேர்வுக்குழு உறுப்பினராக பதவி வகித்ததோடு 2016 தொடக்கம் தற்போது வரை பதவி வகித்தும் வருகின்றார்.

2005 - 2007 காலப்பகுதி வரை இந்திய அணியின் பயிற்சியாளராக விளங்கிய செப்பல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியவர். குறிப்பாக கங்குலியின் கிரிக்கெட் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்ததில் இவருக்கு கணிசமான பங்கிருந்தது. பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டினால் சிமித், வோணர் போன்றவர்களுக்கு விதிக்கப்பட்ட தடையினால் அவுஸ்ரேலியா சந்தித்து வரும் தோல்விகள் இவரது பதவிக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒப்பந்தத்தில் இணைப்பு

பங்களாதேஸ் அணியின் வளர்ந்து வரும் துடுப்பாட்ட வீரரான இம்ருல் கைஸ் கடந்த வருடம் பங்களாதேஸ் கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்ட ஒப்பந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. ஆனால் கடந்தவாரம் அறிவிக்கப்பட்ட 2019 / 20 பருவ காலத்திற்கான ஒப்பந்தப் பட்டியலில் தற்போது அவர் இணைக்கப்பட்டுள்ளார்.

ஏபிளஸ், ஏ, பி என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்ட இந்த ஒப்பந்தப் பட்டியலில் 'ஏ' பிரிவில் இம்ருல் கைஸ் உள்ளடக்கப்பட்டுள்ளார். கடந்த வருடம் ஒப்பந்தப் பட்டியலில் 10 வீரர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இம்முறை இவ்வீரர்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது. இந்தமாதம் நியூசிலாந்து செல்லும் பங்களாதேஸ் அணியில் இம்ருல் கைஸ் நீக்கப்பட்டிருந்தாலும் எதிர்காலப் போட்டிகளைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வீரர்களுக்கான ஒப்பந்தத் தொகை குறித்த விபரம் நியூசிலாந்து சுற்றுப்பயணத்துக்கு முன்னதாக அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அணி மாற்றம்

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் மன்செஸ்ரர் யுனைற்றட் அணியின் போட்டிகளைப் பார்க்கும் ரசிகர்கள் மத்திய கள வீரரான பெலானியை அவ்வளவு எளிதில் மறந்து விட மாட்டார்கள். காரணம் அவரது ஆட்டத்திறனுக்கும் அப்பால் அவரது சிகையலங்காரம் மிகவும் புகழ்பெற்றதாகக் காணப்படுவதனால். ஆனாலும் இனிமேல் மன்செஸ்ரர் யுனைற்றட் ரசிகர்களுக்கு மாத்திரமல்லாமல் பிறீமியர் லீக் ரசிகர்களுக்கும் அவரது ஆட்டத்தை நேரடியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை. ஏனென்றால் பெலானி மன்செஸ்ரர் யுனைற்றட் அணியில் இருந்து விலகி சீன சுப்பர் லீக் தொடரின் சண்டோங் லுனெங் அணிக்காக விளையாடக் கைச்சாத்திட்டுள்ளார்.


2013 எவற்றன் அணியில் இருந்து மன்செஸ்ரர் யுனைற்றட் அணிக்கு ஒப்பந்த மான பெலானி அணியின் முன்னாள் முகாமையாளர்களால் மத்திய கள வீரராக மாத்திரமல்லா மல் துணை முன்கள வீரராகவும் பயன்படுத்தப்பட்டிருந்தார். ஆனாலும் தற்போது முகாமையாளராக உள்ள சோல்ஸ்கஜெர் அவருக்கு ஆதரவாக இல்லாததாலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கருதப்படுகின்றது.




# மீள் வருகை

சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் 6 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவர் இந்தியாவின் சானியா மிர்ஸா. அண்மையில் தான் ஆண் குழந்தை ஒன்றுக்குத் தாயான சானியா தற்போது போட்டிகளில் இருந்து ஒதுங்கி இருந்தாலும் இந்தாண்டு இறுதியில் நடைபெறவுள்ள அமெரிக்க ஓப்பன் தொடரில் கலந்து கொள்வதற்கு ஏற்ற விதத்தில் தன்னைத் தயார்ப்படுத்துவதாக கடந்தவாரம் கூறியுள்ளார்.

முதல் வேலையாக அதிகரித்துள்ள தனது எடையை குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டும் வருகின்றார். இவ்வாண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்காக கணவர் சொகைப் மலிக் தீவிரமாகத் தயாராகி வருகின்றார். ஓய்வின்றித் தவித்து வரும் அவர் குழந்தையோடு குறைந்த நாட்களையே செலவிடுவதை




நினைத்து கவலை கொள்கின்றார். ஆனாலும் நான் தற்போது விளையாடாமல் ஓய்வில் தானே இருக்கின்றேன். எனவே குழந்தையை நான் பராமரித்துக் கொள்கின்றேன். நீங்கள் விளையாட்டில் மட்டும் கவனத்தைச் செலுத்துங்கள் என்பேன். ஒரு விளையாட்டு வீரரால் குடும்பத்துக்காக அதிக நேரத்தை செலவிடுவது எவ்வளவு கடினமானது என்பதை நான் அறிவேன்' எனவும் சானியா கூறியுள்ளார்.

# எதிர்பார்ப்பு அதிகரிப்பு

2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தை கட்டார் நடத்தினாலும் அப்போட்டிகளில் கட்டாரால் பிரகாசிக்க முடியுமா என்றொரு சந்தேகம் கடந்த பல வருடங்களாகவே இருந்து வந்தது. காரணம் உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆசியாவின் பலம் வாய்ந்த 4 அல்லது 5 அணிகளுக்கே வாய்ப்புக் கிடைக்கின்றது. அப்படித் தெரிவான அணிகளால்கூட பெரும்பாலும் முதற்சுற்றுப் போட்டிகளைத் தாண்டுவதே கடினமாக உள்ளது.

இந்நிலையில் ஆசியப் போட்டிகளில் கூட கடந்த காலங்களில் குறிப்பிட்டுச் சொல்லும் படியான பெறுபெற்றை எதுவும் வெளிப்படுத்தாத கட்டாரால் என்னத்தைச் சாதிக்க முடியும் என்பதனாலேயே. விளையாட்டில் வெற்றி தோல்வியை விடப் பங்கு பற்றுதலே முக்கியம் என்றாலும் கட்டாருக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு பலமான ஆசிய அணியொன்றின் வெளியேற்றத்துக்கு காரணமாகவே அமையும் எனவும் விமர்சிக்கப்பட்டது.




இந்நிலையில்தான் நடைபெற்று முடிந்த ஆசியக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் கட்டார் முதன்முறையாகச் சம்பியன் பட்டம் வென்று அத்தகைய விமர்சனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. எனவே இந்த வெற்றி 2022 உலகக் கிண்ணத் தொடரில் கட்டாருக்கு நிச்சயம் உத்வேகத்தைக் கொடுக்குமென நம்பலாம்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 09.02.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.